Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 13 செவ்வாய்க்கிழமை (29.07.2014) பக்கங்கள் 20 ஓசை -301

## நல்லூர் ஆலய சூழலில் கொத்துறொட்டி கடைகளுக்கு தடை

(யாழ்ப்பாணம்)

கொத்துறொட்டிக் கடைகளில் எழுப்பப்படும் தாளங்களில் பூசை வழிபாடுகளில் இடையூறு ஏற்படுவதால் இம்முறை அவ்வாறான கடைகளுக்கு ஆலய சூழலில் அனுமதி அளிக்கப் படமாட்டாது என நல்லூர் ஆலய திருவிழாவுக்கான ஆயத்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ். மாநகர சபையில் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

ஆலய சூழலுக்கு அப்பால் கொத்துறொட்டிக் கடைகளுக்கு அனுமதிக்கப்படும் எனவும் சினிமாப் பாடல்கள் ஒலிப்பதில் கடைகளுக்கு அறிவுறுத்தப்படும் எனவும் இம்முறை வீதித்தடை 24 மணிநேரமும் போடப்படுவதுடன் நண்பகல் 12 மணிமுதல் 2.00 மணிவரை 2 மணிநேரம்

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கின் கல்வி அபிவிருத்திக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு

### கல்வி அமைச்சர் பந்துல தெரிவிப்பு

(கிளிநொச்சி)

யுத்தத்தால் அழிவை மட்டும் ஏற்படுத்த முடியுமே தவிர அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரியில் கொரிய அரசின் நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப் பட்ட கற்றல் கூடங்களை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மூன்று தசாப்த காலங்களாக

19 ஆம் பக்கம் பார்க்க





## திருமலை வளாகத்தில் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

திருகோணமலை வளாகத்தின் அனைத்து பீடங்களுக்குமான மாணவர்கள் நேற்றுத் தொடக்கம் காலவரையறையற்ற வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக, மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செனரத் திசாநாயக்க தெரிவித்தார்.

தமது வளாகத்திற்கான தலைவர் வைத்திய கலாநிதி வர்ணகுலேந்திரன் மீது தவறான குற்றச்சாட்டுக்களை சுமத்தி, அவரை பணியிலிருந்து இடைநிறுத்தியமைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# பொது வேட்பாளர் தெரிவு விவகாரம் சம்பந்தனின் போக்குக்கு கண்டனம்

## இறுதி முடிவு இன்னும் இல்லை சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விவகாரத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இப்போது கருத்து முரண்பாடுகள் முளைவிட ஆரம்பித்துள்ளது.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தத் தீர்மானத்துக்கும் இதுவரை வரவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பல்வேறுபட்ட மாற்றுக் கருத்துக்கள் உள்ளன. இவற்றை எல்லாம் மீறி சம்பந்தன் அரசியல் தலைவர்களுடனான சந்திப்புக்களில் கலந்துகொள்வது பொருத்தமான நடவடிக்கையாக தெரியவில்லை என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவது தொடர்பாக கட்சிக்குள் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனினும் எவ்வித இறுதித் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அரசியல் கட்சிகளின் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ள போதும் அது பொது வேட்பாளரை தெரிவு செய்யும் நோக்கம்

19 ஆம் பக்கம் பார்க்க



## உட்கட்சி முரண்பாடுகளை நீக்காமல் அரசு மீது குற்றம் சுமத்தக்கூடாது

### கூட்டமைப்புக்கு கெஹலிய பதிலடி

(கொழும்பு)

தமது கட்சிக்குள் உள்ள முரண்பாடுகளை நீக்க முயற்சிக்காமல் அரசு கூட்டமைப்பை பிளவுபடுத்த முயற்சிப்பதாக குற்றம்சாட்ட முடியாது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்த அரசாங்கம் நினைக்கிறது என அக்கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளதை அடுத்து அது தொடர்பில் அரசாங்கத்திடம் வினவிய போதே அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரமபுக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரிவினைவாதத்தினை தூண்டுவதும் நாட்டை பிளவுபடுத்த நினைப்பதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேலையே தவிர அரசாங்கம் யாரையும் அழிக்க ஒருபோதும் செயற்படாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பிளவுபடுத்துவதனால் அரசாங்கத்திற்கு எவ்வித இலாபமும் கிடைக்கப் போவதில்லை. அவ்வாறானதொரு அவசியமும் எமக்கு இல்லை.

எனினும் கூட்டமைப்பின் தலைவரே அவ்வாறானதொரு கருத்தினை குறிப்பிட்டிருப்பது உண்மையிலேயே தமிழத் தேசியக் கூட்டமைப்பிற்குள் பிளவினை ஏற்படுத்தியுள்ளதா என்று எண்ணத் தோன்றுகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா வளாகத்தில் மோதல்; மாணவர்கள் மூவர் காயம்

(வவுனியா)

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் நேற்றுக் காலை இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள வியாபார கற்கைநெறி பீடத்தின் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலிலேயே இரண்டாம் வருடத்தில் கல்வி கற்ற மூன்று மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இம்மாணவர்களுக்கு இடையில் கடந்த ஒரு சில மாதங்களாக கருத்து முரண்பாடு நிலவி வந்ததாகவும் அதுவே கைகலப்பாக மாறியதாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில், இரண்டாம் வருடத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ முகாமில் குண்டுவெடிப்பு இராணுவ வீரர் காயம்

(கொழும்பு)

புத்தளம் இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த இராணுவ வீரர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

பயிற்சிகளை முடித்துச் செல்லும் வைபவம் நேற்று மதியம் நடைபெற்ற வேளையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

முகாமில் பணியாற்றிய, குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவின் இராணுவ வீரரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார். சம்பவம் குறித்து இராணுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





## மாகாணசபைக்கு பிரதம செயலாளர் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு

### வடக்கு முதல்வருக்கு எதிரான வழக்கில் உயர்நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபையின் பிரதம செயலாளரை நியமிக்கும் உரிமை ஜனாதிபதியையே சாரும் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக மாகாணசபையின் பிரதம செயலாளர் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான நீதியரசர் குழாம் இந்த மனுவை பரிசீலித்துள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி இந்த மனு மீதான விசாரணைகள் மீளவும் இடம்பெறவுள்ளது.

முதலமைச்சரினால், பிரதம

19 ஆம் பக்கம் பார்க்க

# அரசியல் பருவகாலத்தை மாற்றியமைக்க அனைவரும் ஒன்று திரள வேண்டும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகன் தெரிவிப்பு



இன்னும் எத்தனை காலம்தான் தமிழர்கள் அரசியல் ரீதியான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களை தவறவிடமுடியும். இனிவரவுள்ள அரசியல் பருவகாலத்தை முற்றுமுழுதாக மாற்றியமைக்க அனைவரும் ஒன்றுதிரள வேண்டும் என்பதுதான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எதிர்பார்ப்பாகவுள்ளது என அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன். (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

இளவாலை சித்திரமொழி கிராமத்து மக்களது வாழ்வாதார விடயங்கள் தொடர்பான மக்கள் சந்திப்பு சித்திரமொழி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் அமைச்சரால் கொண்டுவரப்பட்டுள்ள மக்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்த ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேலும் கருத்துக் கூறுகையில்,

இதுவரை காலமும் மக்களுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல அபிவிருத்தித் திட்டங்களைப் பெற்றுத் தந்திருக்கின்றார். ஆனால் இன்று சில திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உள்ளூராட்சி சபைகளின் ஒப்புதல் தேவையாகவுள்ளது. தற்போது அமைச்சர் கொண்டுவந்துள்ள திட்டங்களை நிறைவேற்ற பல பிரதேச சபைகள் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் சில பிரதேச சபைகள் இன்று வரை அந்தத் திட்டத்தை நிறைவேற்றச் சாதகமான பதிலைத் தரவில்லை. இவ்வருட இறுதிக்குள் முடிக்கப்படவேண்டிய அபிவிருத்திகளை இவர்கள் தடுக்க நினைப்பதால் வந்துள்ள நிதியானது மீண்டும் அரச கயானாவுக்கு திரும்பும் நிலை வரவுள்ளது.

தமிழர் விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தேசிய வாதங்கள் மட்டும் தான் பேசப்பட்டு வருகின்றனவே தவிர தமிழர் நிரந்தர தீர்வுக்கான எந்தவொரு சூழ்நிலையையும் அவர்கள் ஏற்படுத்தித் தரவில்லை.

பதவியில் இருக்கும் ஒவ்வொருவரும் சலுகைகளை பெற்றுக் கொள்வது இலகுவானது தான். ஆனால் தமக்கு மட்டும் சுக வாழ்வை பெற்று விட்டு மக்களை நடு வீதிக்கு கொண்டு செல்வது தான் ஒட்டு மொத்த தமிழர்களாலும் ஏற்க முடியாத விடயமாகும்.

ஈ.பி.டி.பி.யையும், இலங்கை அரசையும் விமர்சித்து குடாநாட்டு ஊடகங்கள் எழுதிக் கொண்டிருப்பதனால் தமிழர்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுவிட முடியாது. மக்களுக்கு செய்ய வேண்டியவற்றை யார் தடுத்தாலும் அவர்களையும் விமர்சிக்கவேண்டியது ஊடகங்களது செயலாக இருக்க வேண்டும்.

அரசிடமிருந்து வரும் எந்தவொரு நிதியையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செயற்பாடுகளைச் செய்யாது திருப்பி அனுப்புவது கிடையாது. வரும் அனைத்து நிதிகளையும் மக்கள் வாழ்வாதாரங்களை எவ்வளவு தூரம் விருத்தி செய்ய முடியுமோ அந்தளவுக்கு முழுமூச்சாக செய்து கொடுத்து வருகின்றார் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர்கள் தொடர்ந்தும் தமது எதிர்ப்பரசியலை முன்வைத்து வருவார்களானால் ஒருபோதும் தமிழ் மக்கள் நிம்மதியாகவும் வாழமுடியாது தீர்வுத்திட்டம் எதனையும் பெற்றுக்கொள்ளவும் முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோண்சன் (ஜீவா), சமுர்த்தி உத்தியோகத்தர் நிருஷா ஆகியோருடன் அப்பகுதி மக்களும் கலந்துகொரண்டனர்.

# விவரணச் சித்திரம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற விவரணச் சித்திரம் நல்லூர் கந்தன் கொடியேற்றத் தினத்தில் வெளியிடவுள்ளதாக சர்வதேச குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

நேற்று யாழ்.மாநகரசபையில் இடம்பெற்ற ஆயத்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது பொருளாதாரத்திற்கும் கற்பனைக்கும் ஏற்றவகையில் 10 நிமிடங்கள் அடங்கிய இந்த விபரணச்சித்திரம் இறுவட்டாக நல்லைக் கந்தன் ஆலயக் கொடியேற்றத் தினத்தன்று நல்லை ஆதீன மண்டபத்தில் வெளியிட்டு, சைவ சமய ஆசாரங்களையும், ஆலய வழிபாட்டின் சிறப்பையும் எடுத்துக் கூறவுள்ளோம்.

அத்துடன் ஆசாரசீலர்களாக ஆலயம் செல்வது குறித்து பதாதைகளையும் நாம் தொங்கவிடவுள்ளதுடன், துண்டுப்பிரசுரங்களையும் வெளியிடவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வருடாந்த தேர்த்திருவிழா

(அரியாலை)

அரியாலை ஆனந்தன் வடலி வீதியில் வயற்கரையில் எழுந்தருளி அருள்பாலிக்கும் பேச்சியம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று காலை 8.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்த வருடாந்த திருவிழாவின் 10 ஆம் திருவிழாவாக தேர்த்திருவிழா அதிகாலையில் ஆரம்பமாகவுள்ளது.

காலை 8.00 மணிக்கு அம்பாளின் தேர் ஆரோகணம் நடைபெறும். அடியவர்கள் ஆலயத் தரிசனம் செய்து தேர் ஏறும் திருக்காட்சி கண்டு இஷ்ட சித்திகளைப் பெறும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளனர்.

நாளைய தினம் தீர்த்தோற்சவமும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

# நல்லூர் பெருந்திருவிழாவுக்கான பேருந்து பாதை மாற்ற அறிவித்தல்

(நல்லூர்)

நல்லூர் பெருந்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ளதால் அன்றிலிருந்து எதிர்வரும் 27 ஆம் திகதி வரை யாழ்.மாநகர சபையால் வழமையான பாதையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே பின்வரும் பாதைகள் ஊடாக எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து சேவையாற்றுமாறு மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபை - யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் வழி - யாழ்.மத்திய பேருந்து நிலை யத்தில் இருந்து புறப்பட்டு வைத்திய சாலை வீதியூடாக வேம்படிச் சந்தியிலிருந்து நேராக வைத்தியசாலை வீதி வரை சென்று ஏ-9 வீதியை அடைந்து இடது புறமாகத் திரும்பி கச்சேரியை அடைந்து இடதுபுறமாகத் திரும்பி கச்சேரி-நல்லூர் வீதி வழியாகச் சென்று முத்திரைச் சந்தியை அடைந்து பின்னர் வழ மையான பாதை வழியாகச் சேவையாற்றும்படி கோரப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நுழையும் வழி -

முத்திரைச் சந்தியில் இருந்து யாழ்.மாநகர சபை முன் உள்ள நல்லூர் குறுக்கு வீதியூடாக நாவலர் வீதியை அடைந்து தியாகி அறக்கட்டளை கட்டடத்திற்கு ம்ுன் உள்ள இராசாவின் தோட்ட வீதியூடாக ஸ்ரான்லி வீதியை அடைந்து ஸ்ரான்லி வீதி வழியாக ஆரியகுளம் சந்தியை அடைந்து இடது புறமாகத் திரும்பி வேம்படிச் சந்தியை அடைந்து வைத்தியசாலை வீதி ஊடாக யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைய வேண்டும்.

மினி பஸ் - யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் வழி -

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு கஸ்தூரியார் வீதியூடாக வலது புறம் திரும்பி ஸ்ரான்லி வீதியினை அடைந்து பின் இடது பக்கம் திரும்பி இராசாவின் தோட்ட வீதியை அடைந்து வலது புறம் திரும்பி றக்கா வீதியூடாக சென்று இடது புறம் திரும்பி கச்சேரி நல்லூர் வீதி வழியாகச் சென்று முத்திரைச் சந்தியை அடைந்து பின்னர் வழமையான பாதை வழியாகச் சேவையாற்றும்படி கோரப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நுழையும் வழி - பருத்திதுறை வீதியிலிருந்து முத்திரைச் சந்தியூடாக இடது பக்கம் நல்லூர் குறுக்கு வீதியை அடைந்து பின் வலது பக்கம் திரும்பி நாவலர் வீதியை அடைந்து பின் இடது பக்கம் திரும்பி இராசாவின் தோட்டம் சென்று வலது புறம் திரும்பி ஸ்ரான்லி வீதியை அடைந்து பின் இடது பக்கம் திரும்பி வெலிங்டன் சந்தியை அடைந்த பின் வலது புறம் திரும்பி மின்சார நிலைய வீதியூடாக யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை வந்தடையுமாறு கோரப்பட்டுள்ளது.

# தொழுநோய் கட்டுப்பாடு; ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தினால் நாட்டிலுள்ள சகல மாவட்டங்களிலும் தொழுநோயைக் கட்டுப்படுத்தும் வகையில் ஊடகவியலாளர்களுக்கு அறிவூட்டும் செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற இவ்வாறான ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் கடந்த காலத்தில் இரண்டு தொழுநோய்க் காப்பகங்கள் இருந்து வந்தன.

தொழுநோய் என இனங்காணப்பட்டவர்கள் அங்கு கொண்டு செல்லப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தனர்.

ஆனால் இன்றைய நவீன உலகில் அவ்வாறு தொழுநோய பார்க்கப்படுவதில்லை. இந்த நோயை ஆரம்பத்திலேயே இனங்கண்டுவிட்டால் இலகுவாகக் குணப்படுத்திக் கொள்ள முடிகிறது.

அவர் சமூகத்தில் இருந்து ஒதுங்கியிருக்க வேண்டியதில்லை. அவரின் குறித்த தகவல்கள் சுகாதார அமைப்பினால் இரகசியமாக வைக்கப்படும்.

இவ்வாறான விடயங்கள் மக்களிடத்தே சென்று சேராத நிலையே காணப்படுகின்றது. எனவே ஊடகங்கள் ஊடகவியலாளர்களின் இவ்வாறான விடயங்களை பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலை தோல் வைத்திய நிபுணர்களான வைத்தியர் சத்தியரேகா, வைத்தியர் பெடேசியா சரவணபவன் ஆகியோர் தொழுநோய் குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கவுரை மற்றும் தடுப்பு முறைகள் குறித்து தகவல் வழங்கியதுடன், யாழ்.மாவட்ட தொற்றுநோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி சிவகணேசன் தொழுநோய்க்கான சிகிச்சை முறைகள் குறித்தும், யாழ்.செயலக சமூக சேவை திணைக்களத்தினால் தொழுநோயாளர்களுக்கு வழங்கப்படும் உதவித்திட்டங்கள் குறித்தும் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தார்.

இவ்வாறாக இலங்கையில் மாவட்ட ரீதியில் தொழுநோயைக கட்டுப்படுத்தும் ஊடகவியலாளர் மாநாடுகள் சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்டு வருகின்றன. (பா)

# சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச பொலிஸ் சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நாளை கோபாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அச்சுவேலி, கோப்பாய் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (08)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3395)


# முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி

(உரும்பிராய்)

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிலையத்தலைவர் த.பேரின்பநாயகம் தலைமையில் முன்பள்ளி புதிய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட உப ஆளுநர் வைத்தியகலாநிதி வை.தியாகராசாவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் அ.பஞ்சலிங்கம், கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம், அருட்தந்தை யூட் நிக்ஷன், உரும்பிராய் கிழக்கு கிராம சேவையாளர் எஸ்.எழிலரசன் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (08)

# தபால் ஊழியர்கள் தன்னலமற்று மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்

## பிரதிபிரதம அஞ்சலதிபர் குமாரவேலு தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

தபால் சேவை மக்கள் சேவை என்பதை உணர்ந்து தபால் ஊழியர்கள் தன்னலம் கருதாது பொது மக்களுக்கு சிறப்பாக சேவையாற்ற வேண்டும். இந்த வகையில் யாழ்பிரதம தபாலதிபர் லோகஞானம் சக ஊழியர்களுடன் நட்புடனும் அன்புடனும் பழகி பொதுமக்களுக்கு சிறந்த சேவைபுரிந்துள்ளார்.

இவ்வாறு யாழ். பிரதம அஞ்சல் அலுவலகத்தில் பிரதம தபாலதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்ற அஞ்சலதிபர் ஐ.லோகஞானத்திற்கு மேற்படி தபாலகத்தில் நடைபெற்ற சேவைநலன் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பிரதி பிரதம அஞ்சல் அதிபர் சி.குமாரவேல் குறிப்பிட்டார்.

யாழ்பிரதம தபாலக ஊழியர்களும் அஞ்சல் அதிபர்களும் இணைந்து நடாத்திய இவ்விழாவில் சி.குமாரவேல் தொடர்ந்து உரையாற்றுகையில், இரு நூறு ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்ட இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் கடந்த முப்பத்தேழு வருடங்களாக சிறந்த முறையில் மக்களுக்குச் சேவையாற்றிய லோகஞானம் இன்று முதல் ஓய்வு பெறுகிறார்.

இவர் குழந்தை உள்ளம் கொண்டவர் மிகுந்த பொறுமைசாலி, இன்று நடப்பவற்றை மட்டுமே சிந்திப்பார் எல்லோருடனும் சகஜமாகப் பழகி சேவையைச் சிறப்பாகச் செய்து வந்தார்.

தபால் ஊழியர்கள் தவறிழைக்கும் போதும் எவருக்கும் தண்டனை வழங்கும் நோக்கில் செயற்படமாட்டார்.

எல்லோருக்கும் முன்மாதிரியாகச் செயற்பட்ட இவர் ஓய்வுகாலத்திலும் சமூக சேவை செய்து நீண்ட காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துவதாகவும் குறிப்பிட்டார். (10)

# சேதமடைந்த வீதிகள் காப்பெற் இட்டு புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்.நகரின் விக்ரோறியா வீதி, மணிக்கூட்டு வீதி, மின்சார நிலைய வீதி மற்றும் யாழ்.பருத்தித்துறை வீதியில் ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் நீர்க்குழாய் வெடிப்புக் காரணமாக பழுதடைந்த வீதிப்பகுதி, யாழ்.முதலாம் குறுக்குத் தெருவில் சேதமடைந்திருந்த வீதி என்பன காப்பெற் இடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வீதிகள் காப்பெற் இடப்பட்டு துரிதகதியில் புனரமைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட இவ்வாறான வீதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, யாழ்.அங்காடி நிலையங்களுக்குச் செல்லும் யாழ்.முனியப்பர் வீதி, கந்தப்பசேகரம் வீதி என்பனவும் காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# யாழ்ப்பாண நினைவுகள் பாகம் - 01

## தபேந்திரனின் நூல் வெளியீட்டு விழா



(யாழ்ப்பாணம்)

வேதநாயகம் தபேந்திரனால் "யாழ்ப்பாணநினைவுகள்" என்ற தலைப்பில் தொடராக எழுதப்பட்ட முதல் முப்பது கட்டுரைகளை கைதடி "சிவகாமி பதிப்பகம்" தொகுத்துள்ளது. இந் நூலின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நீராவியடி, இலங்கைவேந்தன் கல்லூரி மண்டபத்தில் அரசாங்க பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் உடுவை எஸ். தில்லைநடராஜா தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை பண்டாரவளை கல்வி வலய தமிழ் பிரிவு கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் வாழ்த்துரைகளை, வடமாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களப் பணிப்பாளர் நா.இராசநாயம்,—வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், ஆகியோர் வழங்கினார்கள்.

முதல் பிரதியை சுவிட்ஸர்லாந்து நாட்டிலிருந்து வருகை தந்த வேல்நாதன் கோசலா தம்பதியர் பெற்றுக் கொண்டனர். யாழ்ப்பாண வாழ்வியலில் 'இடம் பெற்ற விடயங்கள் சமூக வாழ்வியல், போர்க்கால வாழ்வியல் என பலதரப்பட்ட வகைகள் இந் நூலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (63, 90)

ஆமிக்குக் காணி - 05

# போக வெளிக்கிட்ட மூதேவியை இழுத்துப் பிடிச்சு இருத்தின கதை...






போற ஆமியை வழிமறிச்ச நாங்கள் அதின்ரை துன்பத்தை அனுபவிக்கத்தான் வேணும்.

ஆமியோட மல்லுக்கட்டிப் பட்ட கஸ்ரங்களில இருந்து நாங்கள் இன்னும் பாடங்களைப் படிக்கேல்ல.

முப்பது வருசத்துக்கு முந்தி, இப்பிடித்தான் கண்ணிவெடி வைச்சு, அதில நாலு, ஆறு, பத்து ஆமியெண்டு பலியானால் குண்டியில தட்டின புளுகமாகக் கொண்டாடினாங்கள்.

இப்பிடியே இந்தச் சந்தோசம் வளர்ந்து, வளர்ந்து மாங்குளம், யாழ்ப்பாணக் கோட்டை, கொக்காவில், ஆனையிறவு, முல்லைத்தீவு எண்டு ஆமிக்காம்புகள் விழ விழ உச்சிக்குப் போச்சுது.

ஒவ்வொரு தாக்குதலிலயும் ஆமிக்காரர் பலியாகப் பலியாக எங்களுக்குக் கொண்டாட்டமாக இருந்திது.

பலியான ஆமிக்காரற்றை சடலங்களைக் கொண்டு வந்து காட்சிக்கு வைச்சபோது நாங்கள் எல்லாம் கூடி நிண்டு வேடிக்கை பார்த்தம்.

அப்பிடிப் பாக்கிறதில ஒரு சந்தோசம் கூடக் கனபேருக்கு இருந்திது.

இது ஒரு நாகரீகக் கேடு எண்டு ஒரு நாளும் எங்களுக்குப் படேல்ல.

கடைசியில எல்லாத்துக்குமாகச் சேர்த்து வாங்கிக்கட்டினம்.

இதுக்கெல்லாம் முள்ளிவாய்க்காலில எங்களுக்குச் சுடலை ஞானம் பிறந்திருக்க வேணும்.

ஆனால், முள்ளிவாய்க்காலுக்குப் போகாதவன்கள் அரசியல்ல குதிச்சு தமிழ்த்தேசியப் பயிருக்கு தண்ணிவாக்கத் துவங்கினதால...

பழைய குருடி கதவைத் திறவடி எண்ட மாதிரி... வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில ஏறின மாதிரி...

பிறகும் எல்லாற்ற தலைப் பிடரியிலயும் சனியன் ஏறத்தொடங்கியிருக்கு.

கொஞ்ச நாளைக்குக்கு முதல் – அதுதான் போர் முடிஞ்சாப்பிறகு – ஆமியை ஆரும் மதிக்கிறதில்லை.

அதுக்கு முந்தி – போர்க்காலத்தில ஆமியின்ரை வண்டியோ வாகனமோ தலைக்கறுப்போ தெரிஞ்சாப்போதும்... அரைக்கட்டைக்கு இஞ்சாலயே வேலிக்கரையோட மோட்டச்சயிக்கிளோ சயிக்கிளோ நிப்பாட்டிப்போட்டு... பிள்ளையாரே, முருகா காப்பாத்து எண்டோ... அந்தோனியாரே, மாதாவே என்னைக் காத்தருளும் எண்டோ வேர்க்க விறுவிறுக்க நிண்ட காட்சி... மறக்கவே ஏலாது.

போர் முடிஞ்சாப்பிறகு, ஆமிக்காரர் வழியில நிண்டு கெஞ்சினாலும் ஆரும் மறிக்கிறதும் இல்லை. மதிக்கிறதும் இல்லை.

பல்லுப்பிடுங்கப்பட்ட பாம்பைப்போல நிக்காமல் போற ஆட்களைப் பார்த்து 'எல்லாம் ஒரு காலம்தான்' எண்டு மனசுக்குள்ள நினைச்சுக்கொண்டிருந்தாங்கள்.

ஆமிக்குப் பதிலாகப் பொலிஸின்ரை பவர்தான் கூடிக்கொண்டு வந்திது.

பொலிஸின்ரை பவர் கூடினால் சிவில் நிர்வாகத்தின்ரை செல்வாக்கும் கூடுது எண்டுதான் அர்த்தம்.

சிவில் நிர்வாகத்தின்ரை பவர் கூடினால், இயல்பு வாழ்க்கை முன்னேறி வருகுது எண்டு சொல்லலாம்.

இப்பிடி இயல்பு வாழ்க்கைக்குச் சனங்கள் திரும்பினால்.... பிறகு அரசியலுக்கு என்ன செய்யிறது? எதைச் சொல்லிறது? எண்ட குழப்பம் கொஞ்சப்பேருக்குப் பெரிய தலையிடியாக இருந்திது.

உடன ஆமிக்கெதிராக – முட்டையில மசிர் பிடுங்கிற வேலையை ஆரம்பிச்சினம்.

மெல்ல மெல்ல இடங்களைக் காலி பண்ணிக்கொண்டிருந்த ஆமியை ஒரேயடியாக வெளி–யேற வேணும் எண்டு ஒரு சடுதியான அழுத்தத்தைக் குடுக்கத் தொடங்கிச்சினம்.

இது ஒரு திட்டமிட்ட செயல்.

போர் நடந்த எந்த இடத்திலயும் படிப்படியாகவோ மெல்ல மெல்லவாகவோதான் படைவிலகல் நடக்கிறது வழமை.

ஒரேயடியாக இந்தியன் ஆமி இஞ்ச இருந்து விலகினமாதிரிச் சிறிலங்கன் ஆமியும் விலகிப்போயிடும் எண்டுதான் இவை நினைச்சினம்.

அது வேற கதை. இது வேற நிலை எண்டதை இவை ஒருத்தரும் கணக்கில எடுக்கேல்ல.

இதால, ஆமியை வெளியேற்றுவோம் எண்டு இஞ்ச உள்ளூரில ஒரு போராட்டமும் மீண்டும் பாடம் படிப்பிப்போம் எண்ட மாதிரிப் புலம்பெயர்ந்த நாடுகளில ஒரு எழுச்சியும் நடக்க, அரசாங்கம் படையைப் பலப்படுத்தத் தொடங்கிச்சுது.

இந்தக்கட்டத்திலதான்சனியன்உச்சில ஏறினமாதிரி கோபி – தெய்வீகன்விவகாரம்தலையெடுத்துது.

போதாக்குறைக்கு மலேசியாவில இருந்து இன்னும் மூண்டு நாலு பேர் ஏதோ வில்லங்கத்துக்கு அடுக்குப் பண்ணிக்கொண்டிருந்தவை எண்டு பிடிபட்டிச்சினம்.

இப்பிடி எல்லாம் சேர்ந்து ஆமியைக் கலவரப்படுத்த, ஆமியும் நேவியும் எண்டு படைகள் எல்லாம் தங்களைப் பலப்படுத்தத் தொடங்கிச்சினம்.

படைகள் பலப்பட்டால் சனியன் எங்களுக்கு உச்சத்தில எண்டு நினைக்க வேண்டியதுதான்.

இதுதான் இப்ப நடந்து கொண்டிருக்கு.

ஆளை நிப்பாட்டிப் புரியாணியும் படுக்கப் பாயும் குடிக்கத் தண்ணியும் குடுத்த கதையாக காணியைக் குடுக்கிற அளவுக்கு நிலைமை வந்திருக்கு.

எல்லாம் எங்கள் 'தலை'யால் வந்த வினைதான்.

அடுத்தவனுக்கு ஆயிரம் அறிவுரைகள் சொல்வதைவிட, அதில் ஒன்றைக் கடைப்பிடி. - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## புத்திஜீவிகளுக்கு இது அழகில்லையே!

“ஒரு பூகம்பம் வந்து ரஷ்யா முழுக்க அழிந்து போனாலும் உலகத்தில் ஒருவரும் கவலைப்படப் போவதில்லை...” என்று சொன்னார், ரஷ்ய எழுத்தாளர் துர்கனேவ். வேறு யாரோ எவரோ உதவிக்கு வரக்கூடும் என்று எமது மக்களின் காலத்தை இன்று வீணடித்துக் கொண்டிருப்பவர்கள் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரசை எதிர்த்துப் புலிகள் போராடிக் கொண்டிருந்த காலத்தில், அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அடுக்கி புலிகள் பிரச்சாரப்படுத்திக் கொண்டிருந்ததற்கு அவர்களது பக்கத்தில் காரணம் இருந்தது.

தங்களது போராட்டத்தின் மூலம் தனிநாட்டைப் பெற்றுவிடலாம் என்று அவர்கள் மக்களுக்குச் சொன்னார்கள். அதில் தாங்கள் நம்பிக்கையும் வைத்திருந்தார்கள். எனவே, இலங்கை அரசானது பேசவே முடியாத – தொடர்ந்து குற்றங்களை இழைத்தபடி உள்ள மாறா எதிரியாகச் சித்தரிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது.

ஆனால் இப்போது எந்த நம்பிக்கையில், எந்தத் தீர்வை எடுப்பதற்காக, அரசாங்கத்தைப் பேசவே முடியாத எதிரியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் பிரச்சாரப்படுத்தி வருகிறார்கள் என்பதை அவர்கள் விளக்க வேண்டும்.

அவர்கள் மக்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிற அந்த சர்வதேசத்தினர் எடுத்துத் தரப்போகும் எந்தப் பொன்னான தீர்வுத் திட்டம் குழம்பி விடும் என்று, இலங்கை அரசுடன் பேசப் போகாமல் அலட்சியப்படுத்தி வருகிறார்கள் என்பதைத் தெளிவாக மக்களுக்குச் சொல்லவேண்டும்.

ஏனெனில், இருதரப்புக்குமிடையில் பேச்சுவார்த்தை முயற்சிகளை ஆரம்பித்து வைக்க வழியுண்டா என்று அறிய வந்திருந்த தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ரமபோஷவிடம், இந்தியாவும் அமெரிக்காவும் ஐநாவும் செய்துவரும் முயற்சிகளைக் குழப்பிவிட வேண்டாம் என்றே கூட்டமைப்பு அவரைக் கேட்டுக்கொண்டதாக செய்திகள் கூறின.

ஆனால், இந்தியாவோ அமெரிக்காவோ ஐநாவோ இலங்கை நாட்டுக்குள் இருதரப்பும் பேசித் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வுத் தீர்வைக் கண்டுகொள்வதைத் தவிர்த்து வேறொரு வழி இருப்பதாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறியதில்லை; கோடி காட்டியதுமில்லை.

சரி, கூட்டமைப்பினர்தான் அரசாங்கத்துடன், இன்று நடைமுறைக்குச் சாத்தியமான 13 ஆவது திருத்தத்திலிருந்து பேசப் போனால், அடுத்த தேர்தலில் வாக்குகளை இழக்கவேண்டி வந்துவிடும் என்று பயப்படுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

சர்வதேசமானது போர்க்குற்ற விசாரணையைப் பயன்படுத்தி இலங்கை அரசைத் தமக்குக் கீழ் கொண்டுவரப் பார்க்குமே தவிர, தமிழ் மக்களுக்கான தீர்வில் எந்த அக்கறையையும் அது காட்டாது என்று நன்கு தெரிந்து வைத்திருக்கும் தமிழ்ப் புத்திஜீவிகளும், ஆய்வாளர்களும் எழுத்தாளர்களும் எதற்காக மௌனங் காத்தபடி இந்த ஏமாற்றுச் சூழலை இழுத்துச் செல்கிறார்கள்?

இவர்கள் எந்த அரசியல் ஆதாயத்தை அல்லது பொருளாயத நன்மையை எதிர்பார்த்து, பேச்சுவார்த்தையின் அவசியத்தை வற்புறுத்தாதிருக்கிறார்கள்? இவர்களும் தனிநாடோ தன்னாட்சித் தனியலகோ வடக்கு கிழக்கு இணைப்போ இங்கு இனிச் சாத்தியம் என்று முட்டாள்தனமாக நம்பிக்கொண்டிருக்கிறார்களா?

மக்களுக்கு உண்மைநிலையை நடைமுறைச் சாத்தியத்தை எடுத்துரைப்பதில் இவர்களுக்கென்ன அச்சம்? அல்லது அச்சத்தை காரணங் காட்டி இனியுமினியும் எமது சமூகத்திற்குத் தேவையானதை எடுத்துரையாமல் படுகுழியில் போய்விழுவதைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்களா?

மக்களை, சமூகங்களைப் பிரித்துப் பார்க்கும் இனவாதச் சிந்தனைகளுக்குள் தாமும் அமிழ்ந்துகொண்டு, போலித் தேசிய நீரோட்டத்தில் அள்ளுப்பட்டுச் செல்வது புத்திஜீவிகள், கலைஞர்களுக்கு அழகில்லையே!

- ஆசிரியர்.

# காணாமற்போனோர் விசாரணை

# மன்னாரில் அடுத்தகட்ட அமர்வு

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு தமது அடுத்த அமர்வுகளை மன்னார் மாவட்டத்தில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய ஆகஸ்ட் மாதம 8ஆம், 9ஆம் திகதிகளில் மாந்தை மேற்கிலும், 10 ஆம் திகதி மன்னாரிலும், 11 ஆம் திகதி மடுவிலும் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெறவுள்ளன.

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக மூவரடங்கிய நிபுணர் குழுவொன்றை ஜனாதிபதி அண்மையில் நியமித்திருந்தார்.

இந்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டதன் பின்னர் ஆணைக்குழு முதற்தடவையாக மன்னாரில் அமர்வுகளை நடத்தி மக்களிடம் சாட்சியங்களை பதிவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் இடம்பெற்றதா என்பது தொடர்பிலும் இந்த ஆணைக்குழு விசாரணை நடத்தவுள்ளது.

சுயாதீனமான நேரடி உள்ளக விசாரணைகளை நடத்தி அது தொடர்பான அறிக்கையை அரசாங்கத்திடம் ஒப்படைக்க எண்ணியுள்ளதாக காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

# எதிர்பாராத சைக்கிள் விபத்துக்கள்

# பத்து வருடத்தில் 2691 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த பத்து வருடங்களாக இடம்பெற்ற சைக்கிள் விபத்துக்களில் இரண்டாயிரத்து 691 பேர் உயிரிழந்துள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் சைக்கிள் விபத்துக்களில் 258 பேர் உயிரிழந்துள்ளதாக சபையின் தலைவர் சட்டத்தரணி காமினி ஏக்கநாயக்க குறிப்பிட்டார்.

மின்விளக்குகள் இன்றி இரவு நேரத்தில் செலுத்தப்படுகின்ற சைக்கிள்களே பெரும்பாலும் விபத்துக்குள்ளாகின்றன.

சைக்கிள்களின் முன்புறத்தில் வெள்ளை நிற மின்விளக்கும் பின்புறத்தில் சிவப்பு நிற மின்விளக்கும் பொருத்தப்பட்டிருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும் என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த நடைமுறையை பின்பற்றாமல் சைக்கிள்களை செலுத்துவோருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு பொலிஸாருக்கு அதிகாரமுள்ளதாகவும் சட்டத்தரணி காமினி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

# பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாம்

# அடுத்த வருடம் மூடப்படும்

## - புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு -

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாம் அடுத்த வருடம் நடுப் பகுதியில் மூடப்படும் என புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜகத் விஜேதிலக்க தெரிவித்துள்ளார்.

பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் தற்போது 122 முன்னாள் போராளிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

இவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர், புனர்வாழ்வு முகாம் மூடப்படும் என்றும் அவர் கூறினார். வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் சிங்கள மொழி பாடநெறியை பூர்த்தி செய்த, முன்னாள் போராளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வில் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு போர் நிறைவுக்கு வந்த பின்னர், 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் அரசாங்கத்தின் புனர்வாழ்வு பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 11 ஆயிரத்து 800 பேர் பயிற்சிகளை முடித்து சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

யுத்தத்தின் முடிவின் போது 594 சிறுவர் போராளிகள், பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தனர். இவர்களுக்கு கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்பு அதிகாரிகள் செய்து கொடுத்தனர்.

இவர்களில் பலர் உயர் கல்வியை கற்று வருகின்றனர். புனர்வாழ்வு முகாமில் பயிற்சி பெற்றுச் சென்றவர்களில் நான்கு பேர் தற்போது மருத்துவர்களாக தேசிய வைத்தியசாலைகளில் பணியாற்றி வருகின்றனர்.

அத்துடன் புனர்வாழ்வு ஆணையாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட தொழிற் பயிற்சிகளை முடிந்த முன்னாள் போராளிகள் பலர், வெளிநாடுகளில் தொழில் புரிந்து வருகின்றனர் எனவும் புனர்வாழ்வு ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த. (உ/த) பரீட்சை

# 5 ஆம் திகதி ஆரம்பம்

2014 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சைக்கு 234,197 பாடசாலை மாணவர்களும் 62,116 வெளி மாணவர்களும் விண்ணப்பித்துள்ளனர்.

இதேவேளை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# பொதுவேட்பாளரை களமிறக்க

# ஐக்கிய தேசியக் கட்சி இணக்கம்

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இணக்கம் வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது கட்சியின் சார்பில் ஓர் வேட்பாளரை போட்டியிடச் செய்யப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி முன்னதாக அறிவித்திருந்தது.

கட்சியின் தேசியத் தலைவர் ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் குறித்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது ஏனைய கட்சிகளுடன் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இணக்கம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் இன்னமும் அறிவிக்கப்படவில்லை எனவும், இதனால் ரணில் விக்ரமசிங்க பொது வேட்பாளராக போட்டியிடுவாரா இல்லையா என்பது பற்றிய தகவல்களை தற்போதைக்கு வெளியிட முடியாது என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் அறிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதே பிரதான நோக்கம் எனவும் அதற்காக ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படத் திட்டமிட்டுள்ளதாகவும் கட்சியின் உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழர்களின் நலன்களுக்காக இந்தியாவின் தேசிய நலன்களைத் தியாகம் செய்ய முடியாது

## கலாநிதி சுப்பிரமணிய சுவாமி சொல்கிறார்...

**கலாநிதி சுப்பிரமணிய சுவாமி – பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க.)யின் மூலோபாய செயற்பாட்டு குழுவின் தலைவரும், மற்றும் பா.ஜ.க. வின் தேசிய நிறைவேற்று குழுவின் அங்கத்தவருமாவார். டெய்லி மிரருக்காக லங்கா பறனமான்ன கண்ட நேர்காணலிலிருந்து சில பகுதிகள்:**



**கேள்வி: உங்கள் கருத்துப்படி, முன்னைய அரசாங்கத்துடன் ஒப்பிடுகையில் மோடியின் அரசாங்கத்தின் கீழ் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் எந்தவித மாற்றங்கள் உண்டாகும் என நீங்கள் எண்ணுகிறீர்கள்?**

அது முற்றிலும் வித்தியாசமானதாக இருக்கும். அடிப்படை மைல்கல்லான மாற்றமாக சார்க் நாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை நீங்கள் வேறுபடுத்திக் காண-முடியும் - பிரதம மந்திரியின் பதவியேற்பு விழாவுக்கு அனைத்து சார்க் நாடுகளின் தலைவர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பப் பட்டதிலிருந்து அது நன்கு பிரதிபலிக்கிறது.

இரண்டாவதாக சீனா மற்றும் அமெரிக்காவுடன் பரஸ்பர தொடர்புகளை மேற்கொள்வதில் நாங்கள் அணிசாரா கொள்கையினைக் கடைப்பிடிப்போம். முன்னைய அரசாங்கம் அமெரிக்க நலன்களில் சீனாவைக் காட்டிலும் அதிக அக்கறை எடுத்துக் கொண்டது. நாங்கள் செயற்பாட்டில் எங்கள் பாதுகாப்பை விட்டுக் கொடுக்காமல் சீனாவுடன் மிகவும் நெருக்கமாக வேலை செய்ய விரும்புகிறோம்.

மூன்றாவதாக நீண்ட காலம் செல்லும் போது உலக அதிகார அமைப்பு மறுசீரமைப்பு செய்யப்படும் என நாங்கள் நம்புகிறோம். தற்போதைய ஐநா மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் மற்றும் அந்த நோக்கத்துக்காக ஜப்பான் மற்றும் கொரியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் இந்த முயற்சியில் இணைவதை நாங்கள் காண விரும்புகிறோம், ஏனெனில் ஐநாவில் ஆசியாவுக்கு மிகவும் குறைந்த பிரதிநிதித்துவமே உள்ளது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் உங்களை எங்களது கலாச்சார உடன் பிறப்பாகவே கருதுகிறோம். முக்கியமாக அதிகாரப் பகிர்வை முன்னேற்றுவதில் நாங்கள் மும்மரமாக ஈடுபடுவோம், ஆனால் முந்திய அரசாங்கம் செய்ததைப்போல அல்ல. அதை நாங்கள் மிகவும் தனிப்பட்ட முறையில் செய்வோம்.

அதிகாரப் பகிர்வு இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட்டு மற்றும் இறையாண்மை அதிகாரமுள்ள பாராளுமன்றமே அதைத் தீர்மானிக்க வேண்டும். ஆனால் நண்பர்கள் என்கிற வகையில் எங்கள் அழுத்தங்களையும் நாங்கள் செலுத்த முடியும். மற்றும் எந்த மாநிலமாவது - குறிப்பாக தமிழநாடு - எங்கள் நாட்டின் தேசியநோக்கங்களைப் புறக்கணிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம். தமிழர்களின் நலன்களுக்காக இந்தியாவின் தேசிய நலன்களைத் தியாகம் செய்ய முடியாது.

**கேள்வி: பிராந்திய அதிகார சக்தி எது என்பதில் இந்தியாவும் மற்றும் சீனாவும் போட்டி போடுகின்றன, இந்த இரண்டு நாடுகளும் ஒரு நெருங்கிய உறவை தொடர இயலும் என நீங்கள் எண்ணுகிறீர்களா?**

அவர்கள் எங்கள் அயலவர்கள் மற்றும் கலாச்சார ஒற்றுமைகளை நாங்கள் பங்கிட்டுக் கொள்கிறோம். சீனப் பிரதமர் சொல்லியிருப்பதைப்போல இந்தியாவும் மற்றும் சீனாவும் ஒன்று சேர்ந்தால் அதை முழு உலகமுமே கவனிக்கும். நாங்கள் இரு நாடுகளும் சேர்ந்து உலக சனத் தொகையில் 40 விகிதத்தை உள்ளடக்குகிறோம் மற்றும் எங்கள் ஒன்று சேரல் ஒரு பெரிய செய்தி. முரணான நலன்கள் மிகச் சிறிய அளவே எங்களிடம் உள்ளன.

அமெரிக்கா மற்றும் சீனாவுடன் எங்கள் உறவுகளைக் கையாள்வதில் விடயங்களின் தகுதிகளை நாங்கள் கவனத்தில் கொள்வோம். அந்தக் கருத்தில் நாங்கள் முந்தைய அரசாங்கத்தைவிட வித்தியாசமானவர்களாக இருப்போம். உதாரணமாக ஈரானுடனான எங்கள் உறவு, முன்னைய அரசாங்கத்தில் அமெரிக்க அழுத்தம் வேலை செய்தது, ஆனால் எங்களில் அது வேலை செய்யாது.

எல்லைத் தகராறுகளை ஒரு தீவிரமான பிரச்சினையாக நான் கருதவில்லை. தங்களுடன் பரிமாறும் விதத்தில், இந்தியா அமெரிக்காவின் ஒரு கூட்டாளி இல்லை என சீனா உணருமானால் எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவர்கள் தகுந்த மரியாதை காட்டுவார்கள். காஸ்மீர் பிரச்சினை ஒன்று மட்டுமே பாக்கியாக இருக்கும் அதையும் நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தி தீர்த்து வைப்போம்.

**கேள்வி: இந்திய ஊடக அறிக்கைகள் தெரிவித்திருப்பது, இலங்கை மீதான சர்வதேச விசாரணையைக் குறித்து இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு தமிழ்நாட்டிலுள்ள பா.ஜ.க. கூட்டணியினருக்கு அதிர்ச்சியையும் சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக. தமிழ்நாட்டிலுள்ள பா.ஜ.க. கூட்டணியினரின் வளர்ந்து வரும் அழுத்தங்களுக்கு மாறாக அரசாங்கத்தின் நிலை தொடர்ந்து பேணப்படும் என நீங்கள் நம்புகிறீகளா?**

தமிழநாட்டிலிருந்து எந்த அழுத்தமும் இல்லை, மற்றும் வெளிநாட்டுக் கொள்கை என்று வரும்போது மத்திய அரசுதான் அதை முடிவு செய்யும் என்று நாங்கள் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டோம். மாநிலத்தின் கோரிக்கையை நாங்கள் கேட்போம் ஆனால் நாங்கள்தான் முடிவு செய்வோம். அதைத் தடுக்க உங்களுக்கு வீட்டோ எனப்படும் தடை உரிமை அதிகாரம் கிடையாது.

முந்தைய அரசாங்கத்தின் விடயத்தில் தமிழ் தீவிரவாத அமைப்புகளுக்கு தடை உரிமை அதிகாரம் இருந்தது, ஆனால் நாங்கள் அதை அனுமதிக்கப் போவதில்லை. தீவிரவாத தமிழ் கட்சிகளுக்கு பொதுமக்களிடம் செல்வாக்கு இல்லை என்பதை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டுகின்றன- அவை அனைத்தும் தோற்றுவிட்டன.

திரு. வைகோவின் அனைத்து வேட்பாளர்களும் தோற்றதுடன் கட்டுப்பணத்தையும் இழந்துள்ளார்கள். அவர்களுடன் கூட்டணி வைத்ததால் பாஜகவும் பாதிக்கப்பட்டது. எங்கள் அரசாங்கத்தில் இந்த விடயத்தில் தமிழ்நாட்டினால் தடை உரிமை செய்ய முடியும் என்று நான் எண்ணவில்லை. இலங்கையுடன் எங்களது நெருக்கமான உறவை நாங்கள் தொடருவோம்.

> **அதிகாரப் பகிர்வு இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட்டு மற்றும் இறையாண்மை அதிகாரமுள்ள பாராளுமன்றமே அதை தீர்மானிக்க வேண்டும். ஆனால் நண்பர்கள் என்கிற வகையில் எங்கள் அழுத்தங்களையும் நாங்கள் செலுத்த முடியும் மற்றும் எந்த மாநிலமாவது – குறிப்பாக தமிழநாடு – எங்கள் நாட்டின் தேசிய நோக்கங்களைப் புறக்கணிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.**

**கேள்வி: ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணையை இந்தியாவில் நடத்த வேண்டும் என விடுக்கும் அழைப்புகள் பற்றி என்ன நிலைப்பாடு உள்ளது?**

நீங்கள் அவர்களுக்கு விசா வழங்கப் போவதில்லை. அவ்வளவுதான். அதைப்பற்றி இலங்கை ஏன் கவலைப் பட வேண்டும்? யார் அவர்கள்? ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இந்த வகையான தன்னிச்சையான முடிவுகளை மேற்கொள்ள முடியாது. அது தனது பற்களால் கிழிக்க வேண்டுமானால் அது பாதுகாப்புச் சபைக்குச் செல்ல வேண்டும் மற்றும் அங்கு சீனா தனது வீட்டோ என்கிற தடையாணையைப் பிரயோகிக்கும்.

எனவே அது சாதாரணமாக அர்த்தமற்ற ஒரு அச்சம். இலங்கை அதைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை என நான் நினைக்கிறேன். நாங்கள் நிச்சயமாக சர்வதேச முகவர்களால் மனித உரிமைகள் பற்றி வெளிநாட்டு விசாரணைகள் ஊடுருவ அனுமதிக்க மாட்டோம்.

**கேள்வி: சீனா மற்றும் பாகிஸ்தான் என்பனவற்றுடன் இலங்கை நெருங்கிய தொடர்பு வைத்திருப்பது இந்தியாவுக்கு சௌகரியமாக உள்ளதா?**

இது இலங்கையின் தீர்மானம். ஆனால் ஆபத்தான கட்டம் வரும்போது இலங்கை எங்களுடன்தான் நிற்கும் என்பது எங்களுக்குத் தெரியும். அது போதும் எங்களுக்கு - அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவோ அல்லது அக்கறை காட்டவோ போவதில்லை.

சில பாதுகாப்பு சம்பந்தமான விடயங்கள் எழும்போதுதான் கவலைகள் எழும் ஏனெனில் சீனா எங்களுக்கு அடுத்த வீடு போல இருப்பதால் இலங்கைக்குள் அது நேரடிப் பாதையை பயன்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை. ஆனால் பிரச்சினைகளை நாங்கள் நட்பு ரீதியான முறையிலேயே எழுப்புவோம் - நாங்கள் அதிகம் நட்பாக இருப்பது எங்களுக்கு சாதகமான முடிவினைப் பெறுவதற்கே.

> **ஐ.நா. உட்பட பொறுப்புள்ள எந்த முகவரும் இலங்கையில் இனப்படுகொலை நிகழ்ந்துள்ளதாக சொல்லவில்லை. எனவே எந்த அடிப்படையில் சர்வதேச முகவர்களால் வரமுடியும்? இலங்கை விவகாரங்களில் எவரும் தலையிட முடியாது என்றே நான் நினைக்கிறேன்.**

**கேள்வி: இலங்கை அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் 13 ஏ யினை முழுமையாக அமுல் படுத்துவதைப் பற்றிப் பேசியுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் இந்த நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

பொலிஸ் அதிகாரம் போன்ற ஒரு சில விதிகளைத் தவிர ஏனையவை செயற்படுத்தப்படும் என்று நான் நினைத்தேன்.

**கேள்வி: ஆனால் தொடர்ச்சியான புகார்கள் சொல்லப்பட்டு வருகின்றன குறிப்பாக வட மாகாண முதலமைச்சர் ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிகளைக்கூட முறையாக நடைமுறைப் படுத்துவதற்கான சுயாட்சிப் பற்றாக் குறை பற்றி புகார் தெரிவித்துள்ளாரே?**

இதைப்பற்றி முடிவு செய்வதற்கு நான் அரசியலமைப்பைப் பார்க்கவேண்டும். இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிலுள்ள தீவிரவாதிகளுடன்தான் பேசுகிறார்கள், அரசாங்கத்துடன் பேசக்கூடிய என்னைப் போன்றவர்களுடன் பேசுவதில்லை.

தற்போதைய நிலைமை பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் இந்தியாவில் கூட பிராந்திய ஆட்சியில் மத்திய அரசு அதிகம் தலையிடுகிறது என்று எப்போதும் முறைப்பாடுகள் தெரிவிக்கப் படுகின்றன. சமீபத்தில் சமஸ்கிருத வாரம் ஒன்றை நாங்கள் கொண்டாடினோம், நாங்கள் மாநில அதிகாரத்தில் தலையிடுவதாக தமிழ் நாடு கோரிக்கை எழுப்பி எதிர்ப்புத் தெரிவித்தது.

எனவே இப்படியான புகார்கள் இருக்கத்தான் செய்யும், ஆனால் அவை தீவிரமானதோ அல்லது இல்லையோ என்று யாருக்கும் தெரியாது - யாழ்ப்பாணத்திலிருந்து எவரும் இந்தப் பிரச்சினைகள் பற்றி ஒருபோதும் என்னிடம் பேசியதில்லை.

**கேள்வி: மனித உரிமைகள் மீறல்களின் மறு தரவு அல்லாததை உறுதிப் படுத்துவதில் ஜனநாயக நடவடிக்கைகள் மற்றும் பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்துள்ள ஒரு நிலமையில் கூட சர்வதேச தலையீடு இடம்பெறக் கூடாது என நீங்கள் நினைக்கிறீர்களா?**


ஒரு தளத்தில் மட்டுமே சர்வதேச தலையீடு நியாயப்படுத்தப் படுகிறது, அது இனப் படுகொலையின் போது. 2009இல் இலங்கையில் இனப்படுகொலை நிகழ்ந்ததாக ஐநா கூடச் சொல்லவில்லை - தமிழ் நாட்டிலும் மற்றும் லண்டனிலும் உள்ள முட்டாள்கள்தான் அதை முடிவு செய்துள்ளார்கள்.

அந்த விடயத்தில் உள்ள உண்மை என்னவென்றால் பொறுப்புள்ள எந்த முகவரும் இலங்கையில் இனப்படுகொலை நிகழ்ந்துள்ளதாக சொல்லவில்லை. தமிழ் தீவிரவாத சக்திகள் எங்களால் ஒருபோதும் மறக்க முடியாத ராஜீவ் காந்தியின் கொலை உட்பட அநேக அப்பாவிகளைக் கொன்றுள்ளார்கள் என்பதில் ஐயமில்லை.

எனவே எந்த அடிப்படையில் சர்வதேச முகவர்களால் வரமுடியும்? அங்கு மனித உரிமைகளின் மிகைப்பாடு இடம்பெற்றிருந்தால் அதற்கு இலங்கையில் ஒரு ஜனநாயக நடவடிக்கை உள்ளது, நாங்கள் இந்தியாவில் செய்வதுபோல இங்குள்ள மக்கள் அதை எழுப்பட்டும். இலங்கை விவகாரங்களில் யாரும் தலையிட முடியாது என்றே நான் நினைக்கிறேன்.

**நன்றி: டெய்லி மிரர்**

# விமான பராமரிப்பு நிலைய நிர்மாணம் இலங்கை இந்திய உறவைப் பாதிக்கும்



## என்கிறார் தயான் ஜயதிலக

(கொழும்பு)

இந்தியாவிற்கு மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையில் சீன நிறுவனமொன்று விமான பராமரிப்பு நிலையமொன்றை அமைக்க அனுமதிப்பது தேவையற்ற சர்ச்சைகளை ஏற்படுத்துவதுடன் இலங்கை இந்திய உறவைப் பாதிக்கும் என சிரேஷ்ட ராஜதந்திரி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடிய விவகாரங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது.சீன நிறுவனமொன்று இலங்கையில் விமான பராமரிப்பு நிலையமொன்றை அமைப்பதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது என்ற போதிலும், அதன் அமைவிடமே சர்ச்சையை ஏற்படுத்துவதுடன் இலங்கை இந்திய உறவைப் பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையிடமும், இலங்கையின் பாதுகாப்பு இந்தியாவிடமும் தங்கியிருப்பதாக அண்மையில் பாரதீய ஜனதா கட்சி சிரேஸ்ட கொள்கை வகுப்பாளர்களில் ஒருவரான டாக்டர் சேசாஸ்திரி தாரீ வெளியிட்ட கருத்து கவனிக்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்பு தந்திரோபாயங்களில் இலங்கையின் அமைவிடம் முக்கிய பங்கினை வகிக்கின்றது என்பதே இதன் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது என தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

# அதிகாரங்கள் குறைக்கப்படுவதை எந்த ஜனாதிபதியும் விரும்பமாட்டார்

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதனை எந்தவொரு ஜனாதிபதியும் விரும்ப மாட்டார் என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்களை வரையறுத்து ஆட்சி நடாத்தப் போவதாக சிலர பிரசாரம் செய்கின்றனர்.

இந்தப் பிரசாரத்தில் எவ்வித உண்மையும் கிடையாது.

அதிகாரங்களைக் குறைத்து அந்தப் பதவியில் நீடிக்க எந்தவொரு ஜனாதிபதியும் விரும்பமாட்டார். மேலும் நிறைவேற்று அதிகாரங்களை வரையறுத்து அந்தப் பதவியில் நீடிக்க முடியாது.

நிறைவேற்று அதிகாரத்தை வரையறுக்கப் போவதாக செய்யும் பிரசாரம், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் நடவடிக்கையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் விலை அதிகரிக்கப்படாது

(கொழும்பு)

எதிர்வரும் காலத்தில் எரிபொருட்களின் விலையில் அதிகரிப்பு ஏற்படாது என அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் எரிபொருள் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகள் காரணமாக எரிபொருள்களின் விலை அதிகரிக்கும் என சில தரப்பினர் தெரிவித்து வருகின்றனர்.

எனினும் அவ்வாறு எரிபொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படப்போவதில்லை என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# பத்து தாவரவியல் பூங்காக்களை நாடு முழுவதும் உருவாக்கத் திட்டம்


(கொழும்பு)

நாடு முழுவதும் பத்து தாவரவியல் பூங்காக்களை உருவாக்க தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ள குறித்த பத்து பூங்காக்களும் சிவனொளிபாத மலை, நக்கில்ஸ், ஹோர்டன் பிளேஸ், சிங்கராஜ இரத்தினபுரி- நுவரெலியா மற்றும் அம்பகமுவ ஆகிய பிரதேசங்களில் அப்பிரதேசத்துக்குரிய தாவரங்களைக் கொண்ட பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன.

அண்மையில் அரசாங்கம் நான்காவது தாவரவியல் பூங்காவை ஆரம்பித்து வைத்தது. 137 வருடங்களின் பின்னர் நிர்மாணிக்கப்பட்டுள்ள இத்தாவரவியல் பூங்கா சுதந்திரம் பெற்றதன் பின்னர் அமைக்கப்பட்ட முதலாவது தாவரவியல் பூங்கா என்பது சிறப்பான விடயமாகும்.

அம்பாந்தோட்டை மிரிஜ்ஜவல உலர்வலயத்தில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள புதிய தாவரவியல் பூங்கா



இலங்கையில் மிகப்பெரிய தாவரவியல் பூங்கா என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

மற்றுமொரு தாவரவியல் பூங்கா தற்போது அவிஸ்ஸாவெல்ல பிரதேசத்தில் நிர்மாணிககப்பட்டு வருகின்றது.

105 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் குறித்த தாவரவியல் பூங்கா அழியும் அபாயத்தில் உள்ள ஈரவலய தாவரங்களை பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்படுகிறது. மேலும் மருத்துவ தாவர பூங்கா தற்போது குருணாகலை கணேவத்த பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வருவதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அரசாங்கத்தை ஸ்திரமற்றதாக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர்

## துமிந்த சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டினுள் இனவாத மோதலை ஏற்படுத்தி அரசாங்கத்தை சர்வதேசத்தின் மத்தியில் ஸ்திரமற்ற நிலைக்கு கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சியில சிலர் முயற்சித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வா தெரிவித்துள்ளார்..

கொழும்பு மாவட்டத்தை அடிப்படையாக கொண்டு துமிந்த சில்வாவினால் செயற்படுத்தப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மாணவர்களுக்கான பயிற்சி நூல்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வாவின் தனிப்பட்ட நிதியில் இருந்து கற்றல் உபகரணங்கள் மற்றும் விளையாட்டு கழகங்களுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று முஸ்லிம் சிங்கள சமூகங்களுக்கிடையே மோதலை உருவாக்கி சமூகத்தில் பல குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

சர்வதேச ஆதரவுடன் மேற்கொள் ளப்படும் இந்தச் சூழ்ச்சியின் நோக்கம் ஜனாதிபதியின் பயணத்தை தடுப்பதே ஆகும். இன்று நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர். சர்வதேச சூழ்ச்சியினை மேற்கொண்டு நாட்டை அடிமைப்படுத்த எதிர்க்கட்சி முயற்சிகளை மேற்கொள்கின்றது. ஏனென்றால் நாட்டின் அபிவிருத்தியை அவர்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியாதுள்ளது என்றார்.




# கொழும்பில் உலக இறப்பர் மாநாடு 25 நாடுகளின் நிபுணர்கள் பங்கேற்பு

(கொழும்பு)

உலக இறப்பர் மாநாடு 2014 நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமாகியுள்ள நிலையில் நாளை வரை நடைபெறவுள்ளது.

இம்மாநாடு உலக இறப்பர் ஆராய்ச்சி அபிவிருத்திச் சபையுடன் (IRRDB) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை (SLEBD) கொன்பெக்ஸஹப் (CONFEXHUB) உட்பட 20 சர்வதேச அரச நிறுவனங்கள் இணைந்து இம்மாநாட்டை ஏற்பாடு செய்துள் ளன.

உலகின் சிறந்த மாநாடுகளில் ஒன்றாக கருதப்படும் உலக இறப்பர் மாநாட்டை இவ்வருடம் இலங்கையில் நடத்த தீர்மானித்தமை விசேட சந்தர்ப்பமாகும். தேசிய ரீதியில் குறித்த மாநாட்டை நடாத்துவதற்கு தொழிற்றுறை மற்றும் வர்த்தக அமைச்சு- பெருந்தோட்டத்துறை அமைச்சு என்பன அனுசரணை வழங்கியுள்ளன.

25 நாடுகளைச் சேர்ந்த 700 நிபுணர்களும் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர். அவர்களில் 500 வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் 200 உள்நாட்டுப் பிரதிநிதிகளும் அடங்குவர்.

அரச நிறுவனங்கள் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனங்கள் இறப்பர் அமைப்பு ஆகியவற்றைச் சேர்ந்த பிரபலமான 18 விருந்தினர்கள் இம்மாநாட்டில் உரையாற்றுகின்றனர்.

இம்ம்ாநாட்டில் உள்நாட்டு- வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்- ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் இத்துறையிலுள்ள சந்தர்ப்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

உலக இறப்பர் மாநாடு 2013 "நிரந்தர எதிர்காலத்திற்கு விதை விதைப்போம்" என்ற தொனிப்பொருளில் இந்தோனேசியாவின் லெம்பாங்க் நகரில் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது

# ஒரே நாளில் 4 பேர் நீரில் மூழ்கிப் பலி

(கொழும்பு)

நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் நான்கு பேர் நீரில் மூழ்கி பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பூர் அம்மான் நகரத்தில் நீராடச் சென்ற சிறுவர்கள் இருவர் உயிரிழந்ததாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இந்த சிறுவர்கள் தனியாகச் சென்று நீராட முற்பட்ட நிலையில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இவர்கள் 13 மற்றும் 19 வயதுகளை உடைவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, காத்தான் குடி கல்லடி பகுதியில் நீராடச் சென்ற மேலும் இருவர் நேற்று முன்தினம் மாலை நீரில் மூழ்கி பலியானதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. நண்பர்களுடன் சேர்ந்து நீராடச் சென்ற நிலையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இவர்களது சடலங்களும் மட்டக்களப்பு மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளன.

# தரம் குறைந்த எண்ணெய் விற்பனை களனிப் பகுதியில் இருவர் கைது



தரம் குறைந்த உராய்வு நீக்கிய எண்ணெய் மற்றும் கழிவு எண்ணெய் விற்பனை செய்யும் சட்ட விரோத நடவடிக்கை களனி பகுதியில் பதிவாகியுள்ளது.

களனி தீர்க்கப்படாத குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

களனி நாரம்மினிய அபேயாராம வீதியில் அமைந்துள்ள குறிப்பிட்ட இடத்தில் தரம் குறைவான எண்ணெய் விற்பனை செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அனுமதிப்பத்திரங்கள் அவர்கள் வசம் காணப்படவில்லை. குறித்த இடத்தில் இருந்து 33 பீப்பாய் உராய்வு நீக்கிய எண்ணெய் மற்றும் 24 பீப்பாய் கழிவு எண்ணெய் உள்ளிட்ட ஹைட்ரோலிக் எண்ணெய் 4 பீப்பாய்களும் காணப்பட்டன.

அத்துடன் 97 வெறும் பீப்பாய்களும் கெப்ரக வாகனமொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்ப்பட்டு மகர நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்





கைதடியில் இயங்கி வரும் சரஸ்வதி முன்பள்ளி, மின்னொளி முன்பள்ளி, வளர்மதி முன்பள்ளி, நவபுரம் முன்பள்ளி ஆகியன இணைந்து நடாத்திய கண்காட்சி நிகழ்வு கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது..... (51)

# மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் அமைச்சருடன் சந்திப்பு

(மயிலிட்டி)

நான் அரசியலில் தொடர்ந்தும் இருப்பதற்கு காரணம் மக்களின் நலன்சார்ந்த பொதுநலன்களுக்காகவே அன்றி எனது சுயநலன்களுக்காக அல்ல என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் பொய்த்தனமான போலியான அரசியலை ஒரு போதும் செய்ததுமில்லை செய்ய விரும்பியதுமில்லை. எமது மக் களின் நலன்கள் சார்ந்து பல் வேறுபட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன்.

என்னுடைய தேசியமானது நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தேசியமானது பிரச்சினைக்குத் தீர்வு காணாதிருப்பதே ஆகும்.

இதனிடையே மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினரால் பருத்தித்துறை மயிலிட்டித்துறை பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் வான் அகழ்வு பணிகளுக்கேற்ற வகையில் வங்கியில் நிலையான வைப்பிலுள்ள பணத்தை குறித்த நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதனிடம் அமைச்சர் தொலைபேசி ஊடாக பணிப்புரை விடுத்தார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி கரையோர இணைப்பாளர் ரட்ணகுமார், மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் யோகராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# "சொல் விற்பனம்" கருத்தாடல் களம்

அகில இலங்கை கம்பன் கழகத்தின் இளநிலை நிர்வாகத்தினர் நடாத்தும் 'சொல் விற்பனம்' என்னும் கருத்தாடற்களம் இன்று மாலை 5.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இளையதலைமுறையினரின் பேச்சாற்றலை மேம்படுத்தும் பொருட்டு நடாத்தப்படும் இந்நிகழ்வினை ஐ.டி.எம்.நிறுவன நிர்வாக இயக்குநர் வி.ஜனகன் தம்பதியர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கவுள்ளனர். விரிவுரையாளர் அ.ஆரூரன் கடவுள் வாழ்த்து இசைக்க மேல் மாகாண சபை உறுப்பினர் மனோகணேசன் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

கம்பவாரிதி, இ.ஜெயராஜ், கவிஞர் த.சிவசங்கர் கலாநிதி.ஸ்ரீபிரசாந்தன் ஆகியோர் நடுவர்களாக இருக்க "சமூக மனிதர்களாய் நம் இளையோர் மாற பெரிதும் அவசியமானது எது" என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும். (10)

# ஆலயத்திருவிழாவில் தங்கநகைகள் அறுப்பு

(அச்சுவேலி)

பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் திருப்பலி நேற்றுமுன்தினம் முடிவடைந்த பின்னர் பக்தர்களின் நேர்த்திக் கடனுக்காக வழங்கப்படும் உணவுப்பண்டத்தை வாங்கச் சென்ற வேளை மூன்று பெண்களின் தங்க நகைகள் இனந்தெரியாதோரால் அறுத் தெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஒருவரின் 5 1/2 பவுண் தாலிக்கொடியும், 3 1/2 பவுண் சங்கிலி, 2 பவுண் சங்கிலி போன்ற பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளே இவ்வாறு அறுத்தெடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, ஆலய திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்கள் இயன்றளவு தங்கநகைகளை தவிர்த்து ஆலயங்களுக்குச் செல்லுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (85)

# புலமைப்பரிசில் பெற்று சிங்கப்பூர் பயணமானார்

(முழங்காவில்)



பூநகரி பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளரும் பூநகரி மத்தியஸ்த குழுவின் தவிசாளருமான வி.சொக்கநாதன் சிங்கப்பூர் அரசின புலமைப் பரிசில் பெற்று பொது நிர்வாகத்தில் முதுமாணி ஒரு வருடப்படிப்பை மேற்கொள்ள சிங்கப்பூர் பயணமாகியுள்ளார். இவர் கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியின் பழைய மாணவரும் விஸ்வநாதக் குருக்களின் புத்திரருமாவார். இவர் கடந்த ஐந்து வருட காலமாக பூநகரியில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (112)

# அலங்கார உற்சவம்

சாவகச்சேரி மட்டுவில் அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி திருக்கோவில் அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பன்னிரெண்டு தினங்கள் நடைபெறவுள்ள இவ்வலங் கார உற்சவத்தில் தினமும் மு.ப. 10 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி விசேட பூசை, வசந்த மண்டப பூசை நடைபெற்று அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

மாலை உற்சவம் 7 மணியளவில் ஆரம்பமாகி விசேட பூசை, வசந்த மண்டப பூசை, சுவாமி வள்ளி தெய்வானை சமேதராக உள்வீதி, வெளிவீதி உலாவந்து அருள்பாலிக்கவுள்ளார். அலங்கார உற்சவத்தைத் தொடர்ந்து இறுதியாக 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை பிராயச்சித்தம் இடம்பெற்று மாலை வைரவர் சாந்தியும் இடம்பெறவுள்ளது. (இ)

# முரசின் இன்றைய பலன்



(29.07.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் ஆடி மாதம் 13 ஆம் திகதி.
றம்ழான் பெருநாள். துதியை / சித்தம்.
மக நட்சத்திரம் மு.இ. 11.59 வரை. பின் பூரம்.
இராகு காலம் 03.03 - 04.33 வரை. சுபநேரம் 10.33 - 12.03 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மங்கல நிகழ்வு நடக்க இருப்பதினால் மனையை மெருகூட்டும் கைங்கரியத்தில் ஈடுபடல், காரியம் சிதறிவிடல். |
| ரிஷபம் | உதவப்போன கன்னியரால் கௌவரக் குறை ஏற்பட்டு விரக்தி அடைதல், அதிக சத்தம் செவிப்பறையைத் தாக்கியதால் கல்வியில் கவனம் செலுத்த தடை ஏற்படல். |
| மிதுனம் | வைத்தியரின் ஆலோசனையின்றி மருந்தினைப் பாவிக்க முயன்ற வேளை ஒவ்வாமை ஏற்படல், வெளிநாட்டுப்பிரயாணம் மேற்கொண்டவேளை இடைத்தங்கல் நாட்டில் சேரல். |
| கடகம் | பணமுடை ஏற்பட்டபோது மூத்த சகோதரரும் பிதாவும் உதவி செய்ய முன்வரல், கணக்கில் சந்தேகம் ஏற்பட்டதால் தொடர்ந்தும் உறவு வைக்கப்பின்நிற்றல். |
| சிம்மம் | வாக்குவாதம் மற்றும் விதண்டாவாதத்தினால் நிலவிய நட்புக்கெட்டு விடல், தேங்கிய பொருட்களை விற்பனை செய்ய புதிய யுக்தி முறையைச் செயற்படுத்த ஆலோசித்தல். |
| கன்னி | ஏழரைச் சனி கடைக்கூறும் 11 இல் குருவும் இருப்பதால் புதிய முயற்சியை ஆரம்பிக்க விரும்புதல், கிரக தோஷங்கள் கழிப்பதற்கு தெய்வ தலத்திற்கு குடும்பசகிதம் சென்று வரல். |
| துலாம் | ஏற்றவரன் தேடி திருமணம் நிறைவேற்றும் நிலையங்களுக்கு சமூகமளித்தல், நண்பரின் அடாவடித்தனத்தினால் மனமுடைந்து நட்பினைக்கைகழுவிவிடல். |
| விருச்சிகம் | அநாமதேய தொலைபேசி மிரட்டலினால் அச்ச உணர்வும் பதகளிப்பும் ஏற்படல், நீண்டகாலமாக இழுபட்ட வீசா பிரச்சினை சுமுக முடிவினைத்தந்ததால் மகிழ்வு ஏற்படல். |
| தனுசு | சூதல் காய்வது போன்று அயலவருடன் ஏற்படுத்தும் உறவினால் முரண்பாடுகள் அண்டாது விடல், பிறரைநம்பி பணியகத்தில் முக்கிய பொறுப்புக்களை ஒப்படைக்காது நீங்களே கையாளுங்கள். |
| மகரம் | பிதாவின் சொத்துப்பங்கீட்டினை பிள்ளைகள் ஒரு மனதாக ஏற்றல், தமிழ் ஆடி மாதம் ஆதலால் சம்மதம் தெரிவித்தவிவாகக் கலப்பினை ஒத்தி வைத்தல். |
| கும்பம் | நோய்கள் குணமடையாத நிலையில் தெய்வதலத்தை நாடும் யோசனைகணக்கு வழக்கில் தில்லு முல்லு காணப்பட்டதால் முரண்பாடும் உறவு சீர் கெடுதலும் ஏற்படல். |
| மீனம் | தொடர்ந்து நோயினால் பீடிக்கப்படுவதினால் குழந்தையை விற்றுவாங்க நினைத்தல், புத்திமதியை அலட்சியப் படுத்தியதினால் ஆபத்தில் சிக்கித்த வித்தல். |

## கொமன்வெல்த் விளையாட்டு விழா



## கனடா வீராங்கனை ஜொலிப்பு

கொமன்வெல்த் போட்டியின் ஜிம்னாஸ்டிக் ரித்மிக் பிரிவில் கனடா வீராங்கனை பேட்ரிசியா பெஸாவ் பெங்கோ 5 தங்கப் பதக்கங்களைக் குவித்துள்ளார்.

ஜிம்னாஸ்டிக் அணி பிரிவில் 2 தங்கப் பதக்கங்களை வென்ற பேட்ரிசியா, கிளப் பிரிவு, பால் மற்றும் ஹூப் தனிநபர் பிரிவுகளில் 3 தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளார். இதுதவிர ரிப்பன் பிரிவு ஜிம்னாஸ்டிக்கில் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளார். ஒருவேளை ரிப்பன் பிரிவில் பேட்ரிசியா தங்கப் பதக்கம் வென்றிருந்தால், கொமன் வெல்த் போட்டியில் அதிக தங்கப் பதக்கம் (6 பதக்கம்) வென்ற வரான சகநாட்டு ஜிம்னாஸ்டிக் வீராங்கனை அலெக் சாண்ட்ரா ஆர்லேன்டோவின் சாதனையை சமன் செய்திருப்பார்.

# ரக்பி இலங்கை வசம் கிண்ணம்




கொமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் ரக்பி கேடயம் இலங்கை அணி கைப்பற்றிக் கொண்டது. ஸ்கொட்லாந்தின் க்ளஸ் கோவில் கொமன்வெல்த் விளையாட்டு விழா நடைபெற்று வருகின்றது.

இதில் ரக்பி போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இலங்கை மற்றும் ரினிடாட் அன்டு ரூபாக்கோ அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் 24 - 0 என்ற புள்ளிகள் கணக்கில் இலங்கை முன்னிலை பெற்றிருந்தது. தொடர்ந்தும் சிறப்பாக விளையாடிய இலங்கை அணி இரண்டாவது பாதியில் 19 புள்ளிகளைப் பெற்றதுடன் ரினிடாட் அன்ட் ரூபாக்கோ அணியால் 7 புள்ளிகளையே பெற முடிந்தது. இறுதியில் இலங்கை அணி 43 - 7 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதனிடையே பதக்கப் பட்டியலில் அவுஸ்ரேலியா தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

26 தங்கம், 21 வெள்ளி, 26 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தமாக 73 பதக்கங்களைப் பெற்றுள்ள அவுஸ்ரேலியா பதக்கப் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கின்றது.

23 தங்கம் ,17 வெள்ளி மற்றும் 17 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ள இங்கிலாந்து இரண்டாவது இடத்தையும் 11 தங்கம், 8 வெள்ளி மற்றும் 17 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ள ஸ்கொட்லாந்து 3 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

7 தங்கப் பதக்கங்களை சுவீகரித்துள்ள கனடா நான்காம் இடத்தில் உள்ளதுடன் 6 தங்கப் பதக்கங்களுடன் இந்தியா 5 ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, வேல்ஸ்,நைஜீரியா மற்றும் கென்யா ஆகிய நாடுகள் பதக்கப்பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளன. இதுவரை வெள்ளிப் பதக்கத்தை மாத்திரம் சுவீகரித்துள்ள இலங்கை 15 ஆவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளது.

# முதல் பதக்கம்; மறக்க முடியாத தருணம்

## இங்கிலாந்து வீராங்கனை பெருமிதம்

கொமன் வெல்த் போட்டியில் முதல் பதக்கம் வென்றது மறக்க முடியாத தருணமாக அமைந்துள்ளது என இங்கிலாந்து வீராங்கனை ஸ்டிம்ப்சன் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக், ஆசிய போட்டிக்கு அடுத்து பெரிய தொடரான கொமன்வெல்த்தில், முதல் தங்கப்பதக்கம் வென்ற பூரிப்பில் உள்ளார் இங்கிலாந்தின் ஸ்டிம்ப்சன்.

ஸ்கொட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் கொமன்வெல்த் விளையாட்டு நடைபெற்று வருகின்றது. இதில் முதல் தங்கப்பதக்கம் வென்றவர் என்ற பெருமை பெற்றார். இங்கிலாந்தின் ஜோடீ ஸ்டிம்ப்சன். நீச்சல், சைக்கிளிங், ஓட்டம் அடங்கிய டிரையத்லான் போட்டியில், இவர் முதலிடம் பெற்று சாதித்தார்.

இது குறித்து ஸ்டிம்ப்சன் கூறியது:

கொமன்வெல்த் விளையாட்டில், முதல் தங்கம் வென்றது மகிழ்ச்சி. என் குடும்ப உறுப்பினர்கள் சிலர், என் போட்டியைப் பார்க்க நேரில் வந்தனர்.

இவர்கள் முன், தங்கப்பதக்கம் கைப்பற்றியது கூடுதல் உற்சாகம் தருகிறது. இப்பதக்கத்தை எனது குடும்பத்தினருக்கு அர்ப்பணிக்கிறேன்.

நீச்சல் போட்டியில் எப்படியும் தடுமாறுவேன் என முதலில் எண்ணினேன். இதற்கேற்ப கடுமையான போட்டியும் காணப்பட்டது. கடைசியில் சவாலை முறியடித்து வெற்றி பெற்றேன்.

ஓட்டப்பந்தயத்தின் போது, என் அருகில் எந்த வீராங்கனைகளாவது வருகிறார்களா என்பதை அவ்வப்போது பார்த்து உறுதி செய்து கொள்வேன். இம்முறையும் இதைப் பின்பற்றினேன். எனக்கு கிடைத்த இந்த வெற்றிக்கு





பயிற்சியாளர் டேரன் ஸ்மித் தான் முக்கிய காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# மழையில் கரைந்தது இலங்கையின் வெற்றி தொடரை வென்றது தென்னாபிரிக்கா

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. இதன் மூலம் டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக் கொண்டது. இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. விளையாட்டு அரங்கில் நிறைவடைந்தது. இதில் இலங்கை அணி முதல் இனிங்ஸிற்காக 421, தென்னாபிரிக்கா 282 ஓட்டங்களைப் பெற்றது.

139 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய. இலங்கை அணி, சங்கக்கார, மத்தியூஸ் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸிற்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் சங்கக்கார 72, மத்தியூஸ் ஆட்டமிழக்காது 63, தரங்க 30, கௌசல் சில்வா 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோர்கல் நான்கு, ஸ்ரெய்ன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 369 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இறுதி நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி, ஹேரத், எம். பெரேரா ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் விரைவாகப் பறிகொடுத்தது. நான்காம் நாள் மற்றும் ஐந்தாம் நாள் ஆட்டத்தில் இடையிடையே பெய்த மழை காரணமாக இலங்கை அணியின் வெற்றி வாய்ப்பு கைநழுவிப் போனது. இறுதியில் தென்னாபிரிக்க அணி இரண்டாவது இனிங்ஸிங்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அம்லா 25, குயின்டன் கொக் 37, பிலாண்டர் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹேரத் ஐந்து, எம். பெரேரா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.





## காயத்திலிருந்து மீண்ட நெய்மர்

# காதலியுடன் ஜாலி



உலகக்கிண்ண கால்பந்து தொடரில் முதுகில் ஏற்பட்ட காயம் சரியாகி விட்டதால் நட்சத்திர வீரர் நெய்மர் தனது காதலியுடன் கடற்கரையில் நேரத்தை கழித்தார்.

உலகக்கிண்ணப் போட்டியின் போது கொலம்பிய வீரர் தாக்கியதில் நெய்மரின் முதுகெலும்பு முறிந்தது. இதனால் அவர் தொடரில் இருந்து வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து பிரேசில் அணி உலகக் கிண்ணத்தை தவறவிட்டது மட்டுமல்லாமல் ஜேர்மனி அணியிடம் வரலாறு காணாத தோல்வியையும் சந்தித்தது.

பின்னர் உடல் ஓரளவு சரியான நிலையில் மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்திலும் பிரேசில் கோட்டை விட்டது. இந்நிலையில் உடல்நிலை சரியான நெய்மர் இடுப்பில் பேண்டேஜ் போட்டவாறு தனது காதலி புருனாவுடன் ஜேர்மனியில் உள்ள பார்மெண்டிரா கடற்கரையில் நேரத்தை செலவிட்டார்.

மாவட்ட மட்ட தாச்சி

# 2ஆவது சுற்றுக்கு முன்னேறிய அணிகள்

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் மாபெரும் தாச்சிப் போட்டியின் இரண்டாவது சுற்றுக்கு உடுவில் வைகறை, உதயசூரியன், அறிவொளி, அம்பிக்கை அணிகள் முன்னேறியுள்ளன.

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கிகளின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடாத்தும் 18ஆவது தாச்சிப் போட்டிகள் கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகள் விபரம் வருமாறு.

மயிலிட்டி கலைமகள் மற்றும் உடுவில் வைகறை அணிகளுக்கிடையில் நடைபெறவிருந்த போட்டியில் கலைமகள் அணி சமூகளிக்கவில்லை. இதன் காரணமாக உடுவில் வைகறை அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெறவிருந்த போட்டியில் உடுவில்உதயசூரியன் அணியும், மயிலிட்டி பாரதி அணியும் மோதவிருந்தன. இப்போட்டியில் மயிலிட்டி பாரதி அணி குறித்த நேரத்திற்கு சமூகமளிக்காத காரணத்தினால் உடுவில் உதயசூரியன் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

மற்றுமொறு போட்டியில் தைதடி வளர்மதி அணியும் பண்டத்தரிப்பு அறிவொளி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய பண்டத்தரிப்பு அறிவொளி அணி 10-02 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

இறுதியாக மறவன்புலோ அம்பிகை அணிக்கும் சுன்னாகம் காந்தரூபன் அணிக்குமிடையில் நடைபெறவிருந்த போட்டியில் சுன்னாகம் காந்தரூபன் அணி சமூகமளிக்கவில்லை. இதன் காரணமாக அம்பிக்கை அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இச்சுற்றுப் போட்டி வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



வடமாகாண ஆளுநர் கிண்ண சதுரங்கப் போட்டியின் 6 வயதிற்குட்பட்டோருக்கான போட்டியில் சாவகச்சேரி ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த என். நதியா, என் அன் வினித்தா, எஸ். யாழ்மதி முறையே முதல் மூன்று இடங்களையும் பிடித்து அசத்தியுள்ளனர். வெற்றியீட்டியோர் பாடசாலை அதிபர் திருமதி எஸ். கந்தசாமி, பிரதி அதிபர் எஸ். சிவநாயகம், சதுரங்கப் பயிற்றுநர் ரி. இராஜசிங்கம் ஆகியோருடன் இருப்பதைக் காணலாம். (06)

# ஆவரங்கால் இந்து சம்பியன்

(அரியாலை)

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றிக்கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த வாரம் அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. (எஸ்.பி.)




# யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக தேசிய மட்ட மென்பந்து, கரம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெரு விளையாட்டுக்களில் இரு போட்டிகள் யாழ். மாவட்டத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் தெரிவித்துள்ளார்.

நடப்பு ஆண்டிற்கான அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெருவிளையாட்டுக்களில் இம்முறை யாழ்.மாவட்டத்தில் கரம், ஆண்கள் பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. இப்போட்டிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14,15,16ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன. இப்போட்டி நடைபெறும் மைதானம் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட போட்டிகள் நான்கு கட்டங்களாக நடைபெறவுள்ளன. 1ஆம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 4,5,6ஆம் திகதிகளிலும், 2ஆம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 14,15,16ஆம் திகதிகளிலும், 3ஆம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 19,20,21ஆம் திகதிகளிலும், 4ஆம் கட்டப் போட்டியான மெய்வல்லுநர் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

லக்ஸ்மன் அதிரடிச் சதம்

# தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பெருவெற்றி

(தெல்லிப்பளை)

ஆர்.லக்ஸ்மனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி 200 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டமொன்று கடந்த வாரம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும் யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி ஆர். லக்ஸ்மனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆர். லக்ஸ்மன் ஆறு சிக்ஸர்கள், 13 பவுண்டரிகள் அடங்கலாக 105, டிரோஷன் நான்கு சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 79, நிவாஸ் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜித்குமார் மூன்று, மதுஷன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 271 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி லக்ஸ்மன், சாரங்கன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இதில் ராகவன் ஒரு முனையில் நிலைத்து நின்றபோதும், மறுமுனையில் விக்கெட் சரிவை ஏனைய வீரர்களால் நிறுத்த முடியவில்லை. இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 18 ஓவர்கள நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் ராகவன் 31, தனிஷன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சாரங்கன், லக்ஸ்மன் ஆகியோர் தலா மூன்று, செந்தூரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (93)

# கிண்ணம் வென்றது நாவாந்துறை சென்.மேரிஸ்

(உரும்பிராய்)

வடமாகாண சூப்பர் கிங் கால்பந்தாட்ட தொடரின் கிண்ணத்தை யாழ். நாவாந்துறை சென். மேரிஸ் அணி சுவீகரித்துக்கொண்டது

வடமாகாண சூப்பர் கிங் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி யாழ். உரும்பிராய் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் மன்னார் கில்லரி அணியும் யாழ். நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மோதிக் கொண்டன.

ஆரம்பம் முதலே நாவாந்துறை சென். மேரிஸ் அணி ஆதிக்கம் செலுத்தியதுடன் கோல் மழை பொழிந்து அசத்தியது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் மன்னார் கில்லரி அணி செயற்பட்டபோதிலும் நாவாந்துறை சென். மேரிஸ் அணியின் பிற்கள வீரர்களது சிறப்பான தடுப்பாட்டம் காரணமாககோல் எல்லையை நெருங்க முடியவில்லை.



முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை நாவாந்துறை சென். மேரிஸ் அணி 4-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. பின்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டிமோதிக்கொண்டன. இதன் காரணமாக பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் ஒவ்வொரு கோலையே பெற்றுக்கொள்ள முடிந்தது. நிறைவில் சென். மேரிஸ் அணி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இச்சுற்றுப்போட்டியில் அதிக கோல்களை போட்ட அணியாக மன்னார் கில்லரி அணி தெரிவு செய்யப்பட்டது. சிறந்த அணி முகாமைத்துவத்திற்கான கிண்ணம் மன்னார் சென். லூசியஸ் அணிக்கு வழங்கப்பட்டது.

இப்போட்டி நிகழ்வில் யாழ்ப்பாணக் கால்பந்து லீக்கைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டிகளைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது.

# விரைவில் 3ஆவது சுற்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை, பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான மூன்றாவது சுற்று ஆட்டம் இரண்டாம் தவணை விடுமுறையைத் தொடர்ந்து நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது சுற்றுக்கு யாழ். மாவட்டம் சார்பாக சென். ஜோண்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகள் தகுதி பெற்றுள்ளன. இரு அணிகளும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (எஸ்.பி.)

# சேனாதிராசா இன்னும் கொஞ்சம் படிக்க வேண்டும்...

- சங்கரசிவன்



தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைத்துச் செயற்பட இயலாத நிலையிலிருக்கும் தமிழ்த்தலைமை தமது இயலாமையை மூடி மறைப்பதற்காகச் சர்வ தேச சமூகத்தின் கீழ்குளிர் காய்கின்றது. எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று கூறித் தங்கள் இயலாமையை மறைக்கின்றார்கள்.

சர்வதேச சமூகத்தின் மீது மக்களிடம் நம்பிக்கையை வளர்க்கும் விதத்தில் பொய் யாய மாயைத் தோற்றங்களைக் காட்டுவது இவர்களுக்கு வழக்கமாகி விட்டது. சர்வ தேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் ஒரு மாயைத் தோற்றத்தைக் காட்டினார்கள்.

யூலை 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மாவை சேனாதிராசா சைப்ரஸ் பிரச்சினையை வளைத்துத் திரித்துக் காட்டிய மாயைத் தோற்றத்தின் ஒரு பகுதியைக் கீழே பார்ப்போம்.

"சைப்ரஸ் - துருக்கி மோதலின் போது சைப்ரஸின் பல பகுதிகளைத் துருக்கி ஆக்கிரமித்தது. பெண்ணொருவர் தலைமையில் பெண்கள் படையொன்று தமது சொந்த இடங்களுக்குத் தடைகளை மீறிச் சென்ற போது கைது செய்யப்பட்டனர். பின்னர் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட அமைப்புகளின் தலையீட்டால் விடுதலை செய்யப்பட்டனர்.

தமது இருப்பிடங்களையும் காணிகளையும் மீட்டுத்தருமாறு அப் பெண்கள் ஐக்கிய நாடுகள் சபையிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதனையடுத்து பதினாறு நீதிபதிகளைக் கொண்ட குழாம் ஒன்று அமைக்கப்பட்டு ஒன்பது வருடங்கள் வழக்கு நடத்தப்பட்டு அந்த மக்களின் இருப்பிடங்கள், காணிகளை உடனடியாக சைப்ரஸ் மக்களிடம் கையளிக்க வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. துருக்கியால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் சைப்ரஸ் மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார சேதத்துக்கு நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது."

இது சேனாதிராசா கூறிய வரலாறு. இனி உண்மை வரலாற்றைப் பார்ப்போம்.

துருக்கியின் படையெடுப்பை சைப்ரஸ் நாட்டுக்கும் துருக்கிக்கும் இடையிலான பிரச்சினையின் விளைவாக மாவையார் காட்டுகின்ற போதிலும் அது சைப்ரஸ் நாட்டிலுள்ள இரண்டு இன்ங்களுக்கிடையிலான பிரச்சினையின் விளைவு. கிரேக்க மொழி பேசுபவர்களும் துருக்கி மொழி பேசுபவர்களும் சைப்ரஸின் இரண்டு பெரிய இனங்கள். கிரேக்க மொழி பேசுவோர் 78.9 வீதத்தினர். துருக்கி மொழி பேசுவோர் 18.4 வீதம். ஏனையோர் 2.7 வீதம். துருக்கி மொழி பேசுவோரும் கிரேக்க மொழி பேசுவோரும் நீண்டகால மோதல் வரலாற்றைக் கொண்ட இனங்கள். இவர்களுக்கு முறையே துருக்கியும் கிரேக்கமும் பின்புல ஆதரவை வழங்கிவந்தன.

சைப்ரஸிலிருந்து வெளியேறிய பிரித்தானியா அந்நாட்டின் நல்லாட்சிக்கு உத்தரவாதமளிக்கும் நாடுகளாகத் தன்னையும் துருக்கியையும் கிரேக்கத்தையும் நியமித்தது. சைப்ரஸின் இரண்டு பெரிய மொழிவாரி இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளாகவே துருக்கியும் கிரேக்கமும் கருத்தப்பட்டன.

1974 யூலை முற்பகுதியில் கிரேக்க அரசாங்கத்தின் ஆதரவுடன் ஜனாதிபதி மக்காரியஸ்ஸுக்கு எதிராக இடம்பெற்ற சதிப்புரட்சியைத் தொடர்ந்து யூலை 20 ஆம் திகதி துருக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. சைப்ரஸின் வட பகுதியில் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 37 வீதத்தைத் துருக்கி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

அப்பகுதிகளில் வாழ்ந்த கிரேக்க மொழி பேசுவோர் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இவர்கள் கிரேக்க மொழி பேசும் மொத்த சனத்தொகையில் 40 வீதத்தினர். இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களில் பலர் தங்கள் சொந்தப் பிரதேசங்களுக்குத் தடையை மீறிச் சென்ற போது கைது செய்யப்பட்டுச் சர்வதேச அழுத்தம் காரணமாக விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் துருக்கி மொழி பேசுவோர் துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்த வட சைப்ரஸ் பிரதேசத்தைத் தனி நாடாக 1983 நவம்பரில் பிரகடனப் படுத்தினர். இந்தத் தனி நாட்டை இதுவரை துருக்கியைத் தவிர வேறெந்த நாடும் அங்கீகரிக்கவில்லை.

இவ்வளவும் நடந்தும் ஐக்கிய நாடுகள் சபையினால் எதுவும் செய்ய முடியவில்லை. கைப்பற்றப்பட்ட பகுதிகளிலிருந்து துருக்கி வெளியேற வேண்டும் என்றும் அப் பகுதிகளில் கிரேக்க மொழி பேசுவோருக்குச் சொந்தமானவையாக இருந்த சொத்துக்கள் அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையும் பாதுகாப்புச் சபையும் பல தீர்மானங்களை நிறைவேற்றிய போதிலும் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை. ஒருதலைப்பட்ச தனி நாட்டுப் பிரகடனத்தைக் கூட ஐக்கிய நாடுகள் சபையினால் தடுக்க முடியவில்லை.

இந்த நிலையில் துருக்கி கைப்பற் றிய பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அகதி முகாமில் வாழ்ந்து கொண்டிருந்த ரைரினா லொய்ஸிதோ (TITINA LOIZIDOU) என்ற பெண் செய்த விண்ணப்பத்தின் அடிப்படையில் மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் நீதிபதிகள் குழாமொன்றை நியமித்து வழங்கு விசாரணையை மேற்கொண்டது.

நீண்டகால விசாரணைக்குப் பின். ஆக்கிரமிப்புப் பிரதேசத்திலுள்ள தனது சகல உடைமைகளுக்கும் லொய்ஸிதோவே சட்டரீதியான உரித்தாளர் என்றும் துருக்கியின் ஆக்கிரமிப்பு சட்டவிரோதமானது என்றும் துருக்கி வழக்காளிக்கு 825,000 அமெரிக்க டொலர் நட்டஈடாக வழங்க வேண்டும் என்றும் 1996 டிசம்பர் 18ஆம் திகதி நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர். அத்தீர்ப்பு அரசியல் சார்பானது என்று கூறித் துருக்கி அதை நிராகரித்தது.

மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பினால் பிரச்சினை முடிவுக்கு வந்தது என்ற வகையிலேயே சேனாதிராசா பேசியிருக்கின்றார். நீதிமன்றத் தீர்ப்பினால் எந்தப் பிரச்சினையும் தீரவில்லை என்பதே உண்மை நிலை. சைப்ரஸ் பிரச்சினையின் தீர்வுக்கான முயற்சிகள் இன்று வரை தொடர்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபைக்குக் கோரிக்கை விடுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்றலாம் எனற் நம்பிக்கையை மக்களிடம் வளர்ப்பதற்காகவே இப்படியொரு மாயைத் தோற்றத்தை மாவை சேனாதிபதிராசா காட்டியிருக்கின்றார். என்னவாக இருந்தாலும் சர்வதேச அரசியலில் அவர் படிப்பதற்கு நிறைய உண்டு.

# டெங்குக் காய்ச்சலுக்கு பப்பாசி இலை மருந்து!



டெங்குக் காய்ச்சல் வராமல் தடுக்க தடுப்பூசியோ மருந்துகளோ கிடையாது. இதற்கெனப் பிரத்தியேகமான சிகிச்சையும் இல்லை. சாதாரண காய்ச்சலுக்கான சிகிச்சைதான் டெங்குவுக்கும். இது தானாகவே குணமானால்தான் உண்டு.

சித்த மருத்துவத்தில் நிலவேம்புக் கஷாயமும் ஆடாதொடை நீரும் இதைக் குணப்படுத்துவதாகப் பரிந்துரை செய்கின்றனர். இப்போது இந்த மருத்துவத்தில் பப்பாசியும் சேர்ந்துள்ளது. பப்பாசி இலையில் இருக்கின்ற ஒரு வகை இரசாயனப்பொருள் டெங்கு கிருமிகளை அழிப்பதாக இந்திய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

டெங்கு காய்ச்சல் டெங்கு எனும் வைரஸ் கிருமிகளின் பாதிப்பால் வருகிறது. இக்கிருமித் தொற்றுள்ள "ஏடஸ் எஜிப்டி" எனும் நுளம்புகள் மக்களைக் கடிக்கும்போது டெங்கு பரவுகிறது. குழந்தைகள், பெரியவர்கள் என வயது வித்தியாசமின்றி அனைவரையும் இது தாக்கக்கூடியதுதான் என்றாலும், பெரியவர்களுக்கு இருக்கின்ற நோய் எதிர்ப்பு சக்தி காரணமாக இது அவர்களை அவ்வளவாகப் பாதிப்பதில்லை. அதேநேரத்தில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துள்ள குழந்தைகளை டெங்கு தாக்கும்போது பல ஆபத்துகள் அணிவகுக்கின்றன.

நுளம்பு கடித்த ஒரு வாரத்தில் நோய் தொடங்கி விடும். ஆரம்பத்தில் காய்ச்சல், தலைவலி, உடல்வலி, மூட்டுவலி, வாந்தி, களைப்பு, இருமல், தொண்டைவலி ஆகிய மிதமான அறிகுறிகள் மட்டுமே காணப்படும். நோய் வந்த நான்காம் நாளில் மூட்டுவலி அதிகமாகும். எலும்புகளை முறித்துப் போட்டது போல் எல்லா மூட்டுகளிலும் வலி அதிகரிப்பது இந்த நோயின் முக்கிய அறிகுறி.

அதே நேரத்தில் நோயுற்ற குழந்தையின் உடல் முழுவதும் தோலில் சிவப்புப் புள்ளிகள் தோன்றும். டெங்கு வைரஸ்கள் ரத்தக்குழாய்களைப் பாதிப்பதால், அவற்றில் மெல்லிய துளைகள் விழுந்து, ரத்தத்தை உடலின் உள் உறுப்புகளில் கசிய விடும். இதன் விளைவால் ஏற்படும் சிவப்புப் புள்ளிகளே இவை.

பொதுவாக டெங்கு காய்ச்சல் 7 நாளில் சரியாகிவிடும். சிலருக்கு மட்டுமே மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும்.

ஒருவருக்கு டெங்கு பாதிப்பு உள்ளதா என்பதைக் கண்டறிய ஐஜிஎம் எலிசா, பி.சி.ஆர் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இந்தப் பாதிப்பு இருப்பது உறுதியானால், நோயாளியை மருத்துவமனையில் அனுமதித்து, சிகிச்சை அளிக்க வேண்டும்.

இந்தக் காய்ச்சலுக்கு பப்பாசி இலைச்சாறு நல்ல பலன் தருகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தச் சாற்றில் உள்ள ஒரு இரசாயனப்பொருள் டெங்கு கிருமியையே அழித்துவிடுகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இந்த ஆராய்ச்சியை இன்னும் விரிவுபடுத்தி, பப்பாசி இலையிலுள்ள குவர்செட்டின் (Quercetin) எனும் மூலக்கூற்றைப் பிரித்தெடுத்து அதை ஒரு மருந்துப் பொருளாகத் தயாரிக்க வேண்டும். அப்படித் தயாரித்துவிட்டால், டெங்குவை ஒழிக்க மிகச் சரியான சிகிச்சை கிடைத்து விடும்.

# இலவச இணைய சேவை கொடுங்கள்!



ஃபேஸ்புக் நிறுவனர் மார்க் ஸுக்கர்பெர்க், உலகில் உள்ள அனைவருக்கும் இலவச இன்ரநெற் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சர்வதேச அளவில் வைத்துள்ளார். எப்படி அவசிய சேவை (நெருப்பு, காவல், பேரிடர், அம்புலன்ஸ் போன்றவை) களை, கட்டணமின்றி, இலவசமாக தொலைபேசியில் அழைக்கிறோமோ, அதே போல இணைய இணைப்பும் இலவசமாக மக்களுக்கு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

வோல் ஸ்ட்ரீட் இதழில் எழுதப்பட்டுள்ள கட்டுரை ஒன்றில் இதற்கான திட்டத்தினையும் தந்துள்ளார். இந்த இதழ் சார்ந்து, இவர் மற்ற சில நிறுவனங்களுடன் இணைந்து Internet.org என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கி உள்ளார். இதில் ஃபேஸ்புக், ஒப்பாரா மற்றும் தகவல் தொழில் நுட்பப்பிரிவில் இயங்கும் பல முன்னணி நிறுவனங்கள் இணைந்துள்ளன.

இந்தக் குழுவில் உள்ளோர், உலகில் உள்ள அனைவருக்கும் இலவச இணைய சேவை கிடைக்க வேண்டும் என்பதனைத் தங்கள் முதன்மை இலக்காகக் கொண்டுள்ளனர். தற்போது, உலக அளவில் மூன்றில் ஒரு பங்கினர் தான் இணைய இணைப்பு சேவையினைப் பெற்று பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலை முற்றிலும் மாற வேண்டும். அனைவருக்கும் இணைய சேவை இலவசமாகத் தரப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மூன்றில் இரண்டு பங்கு பேருக்கு இணைய இணைப்பு இல்லாததால், அவர்களின் அறிவுத் திறனையும், கற்பனைத் திறனையும் இந்த உலகம் பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறது. இது உலக மக்களுக்கு மாபெரும் இழப்பாகும். எனவே தான் இந்த நோக்கத்துடன் செயல்படுகிறோம் என இந்த அமைப்பு அறிவித்துள்ளது.

# “பத்திரிகை ஆசிரியன் எழுதக் கூடாது!”

– ஆனந்த விகடன் முன்னாள் ஆசிரியர் எஸ்.பாலசுப்ரமணியன் –

**சிறுபத்திரிகைகளில் எழுதிக்கொண்டிருந்த ஜெயகாந்தனை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?**


ஒருநாள் மணியன்தான் வந்து “இந்தக் கதையைப் படிச்சுப் பாருங்க” என்று ஒரு கதையை வாசிக்கக் கொடுத்தார். கதையைப் படிச்சபோது பிரமிப்பா இருந்தது. அதுவரைக்கும் படிச்ச மாதிரி இல்லை அந்த எழுத்து. ஒன்றைச் சொல்ல முடிவு பண்ணிட்டா அதை அப்படியே தலையில ஆணி அடிச்சு சொன்னதுபோல இருந்துது. ஆனால், பாலியல் வர்ணனைகளும் கொஞ்சம் இருந்துது. “எழுத்து பிரமாதமா இருக்கு. ஆனா, இந்த மாதிரி வர்ணனைகள் நமக்கு சரிப்படாதே” என்றேன். “நீங்கள் ஒருமுறை அவரைச் சந்தியுங்களேன்” என்றார் மணியன். “ஓ... சந்திக்கலாமே” என்றேன். அப்படித்தான் விகடன் அலுவலகத்துக்கு ஜெயகாந்தன் வந்தார். வரும்போதே ஒரு கதையைக் கையில் எடுத்துட்டு வந்தார். “விழுதுகள்” என்று நினைக்கிறேன். என் கையில கொடுத்துட்டு, கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருந்தார். அவர் போன உடனே அந்தக் கதையைப் படிச்சா, அவ்ளோ பிரமாதமா இருக்கு!

அப்போ வாரம் ஒரு நல்ல கதையைத் தேர்வு பண்ணி அதுக்கு முத்திரை கொடுக்குறது வழக்கம். அப்படி முத்திரைக் கதையா இருந்தா பரிசு ஐநூறு ரூபாய். அப்போ அது பெரிய காசு. அதாவது, எங்கள் கம்பெனி ஜெனரல் மனேஜருக்கே எண்ணூறு ரூபாய்தான் சம்பளம். அந்த வார முத்திரையை ஜெயகாந்தன் கதைக்குக் கொடுத்தோம். கதை பிரசுரமானதும், ஜெயகாந்தன் வந்து என்னைப் பாத்தார். சன்மானத் தொகைபற்றி அவருக்கு ஆச்சரியம். “இந்தப் பணம் பெரிசு இல்லை. இப்படிப்பட்ட ஒரு கதைக்கு இதைக்கூட கொடுக்கவில்லை என்றால் நாங்கள் தப்பு பண்ணினவர்கள் ஆயிடுவோம்” என்று சொன்னேன். “தொடர்ந்து விகடனுக்கு எழுதுங்கோ” என்றும் சொன்னேன். இப்படித்தான் ஜெயகாந்தன் எங்களுக்கும் எங்கள் வாசகர்களுக்கும் அறிமுகம் ஆனார்.

**பாலியல்ரீதியாக ஏமாற்றப்பட்ட மகளின் தலையில் அவளுடைய தாய் தண்ணீரைக் கொட்டி, ‘இது அக்கினி மாதிரி... நீ சுத்தமாயிட்ட’ என்று சொல்லி சுத்தமாக்கும் அவரது ‘அக்கினிப் பிரவேசம்’ கதையை 1966-லேயே துணிச்சலாக வெளியிட்டிருக்கிறீர்கள். எதிர்வினைகள் ஏதும் வரவில்லையா?**

நல்லாக் கேட்டீங்க... பெரிய களேபரமே ஆகிப்போச்சு. ஆசிரியர் இலாகாவுக்குள்ளேயே எதிர்ப்பு. விகடன் இப்படி ஒரு கதையை எப்படிப் போடலாம் என்று ஆசிரியர் குழுவிலேயே சிலர் கடுமையா எதிர்த்தார்கள். கடைசியா விஷயம் பாஸ் காதுக்குப் போயிற்று (தந்தையார் எஸ்.எஸ். வாசன் பற்றி இப்படித்தான் குறிப்பிடுகிறார்). அப்போ அவர் விகடனை அதிகம் கவனிக்கவில்லை. சினிமாவிலே பிஸி. அவர் என்னைக் கூப்பிட்டு, “என்னப்பா பாலு! அக்கினிப் பிரவேசம் என்று ஒரு கதை போட்டிருக்கியாமே” என்றார். “ஆமாம், ஜெயகாந்தன்னு ஒருத்தரோட கதை” என்றேன். “அதுக்கு முத்திரையெல்லாம் போட்டிருக்கியாமே?” என்றார். “ஆமாம்” என்றேன். “அந்தக் கதையைப் போட்டதே தப்பு” என்று (கொத்தமங்கலம்) சுப்பு மாதிரியானவர்கள் சொல்கிறார்களே” என்றார்.

நான் அந்தக் கதை வந்த விகடனை பாஸிடம் குடுத்து, “நீங்க கதையைப் படியுங்க. படிச்சுட்டு, நான் பண்ணினது தப்புதான் என்று சொன்னால், வாசகர்கள் உட்பட அத்தனை பேரிடமும் மன்னிப்பு கேட்டுக்குறேன்” என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மறுநாள் கூப்பிட்டார். போனேன். “ஏம்பா, இந்தக் கதையையா நல்லாயில்லை என்று சொன்னாங்க! ஒருமுறை அந்த ஜெயகாந்தனை வரச்சொல்லு. நான் பார்க்கணும்” என்றார்... இவ்வளவு கதை இருக்கு, அந்த ஒரு கதைக்குப் பின்னால...



**ஜெயகாந்தன் கறாரானவர் தன்னுடைய கதைக்குத் தானே ராஜா என்று நினைப்பவர் ஒரு வார்த்தையைத் திருத்தக்கூட அவரிடம் அனுமதி கேட்க வேண்டும் என்றெல்லாம் சொல்லப்படுவது உண்டு. அதேசமயம், ஒரு பத்திரிகையைப் பொறுத்தவரை அதன் ஆசிரியரே இறுதி முடிவை எடுப்பவர். ஒரு ஆசிரியர் - ஒரு எழுத்தாளர் இருவருக்குமான சுதந்திரத்தின் எல்லைகளை எப்படிக் கையாண்டீர்கள்?**


கதை வேணுமா, வேண்டாமா என்று ஆசிரியர் தான் முடிவெடுக்கிறார். அப்புறம் ஆசிரியர் கேட்கிற திருத்தங்கள் அந்தப் படைப்பு மேல உள்ள அக்கறையில வர்றது. நான் ஜெயகாந்தனுடைய கறாரை ஒரு எழுத்தாளனுடைய கர்வமாகப் பார்க்கவில்லை. ஒரு எழுத்தாளனுடைய தன்னம்பிக்கையாகவும், துணிச்சலாகவும் பார்த்தேன். “நீ யாராயும் இரு. எனக்குத் தெரியும், என் கதையில இருக்கிற அழகு, அழுத்தம், ஆழம்” என்கிற சுய மதிப்பீட்டினுடைய வெளிப்பாடா பார்த்தேன். அதேசமயம், ஜெயகாந்தன் நான் சொல்கிற திருத்தங்களை ரொம்ப கவனமாக் கேட்பார். சரி என்று பட்டால் ஏற்றுக்கொள்வார். நாம் எதிர்பார்க்கிற திருத்தங்களை நாமே ஆச்சரியப்படுகிற வகையில அற்புதமா திருத்தி மறுநாள் அனுப்புவார்.

**எவ்வளவோ எழுத்தாளர்களைப் படித்திருக்கிறீர்கள், இன்னும் சொல்லப்போனால், நீங்களும் ஒரு எழுத்தாளர். ஜெயகாந்தன் மாதிரி ஒரு எழுத்தாளர் இப்படி ஓஹோவென ஆர்ப்பாட்டமாக எழும் காலகட்டத்தில், உங்களுக்குள் இருந்த எழுத்தாளர் ‘சேவற்கொடியோன்’ என்ன நினைத்தார்?**

பத்திரிகை ஆசிரியனாக எப்போ ஆகினேனோ, அப்பவே “சேவற்கொடியோன்” கதையை முடிச்சுட்டேனே? என்னைப் பொறுத்த அளவில் ஒரு பத்திரிகை ஆசிரியன் எழுதக் கூடாது. அவன் எழுதணும் என்று நினைச்சா, தன்னை மீறி ஒருத்தன் எழுதுறதை அவனுடைய ஈகோ அனுமதிக்காது. தானே எழுதிச் சுகம் கண்டு, பத்திரிகையில வேறு நல்ல எழுத்தாளர்கள் யாரையும் வளர விடாமல் பண்ணிடுவார்கள் என்பது என் கருத்து. அதனால, ஜெயகாந்தனுடைய எழுச்சியை, பாலசுப்ரமணியன் என்கிற பத்திரிகை ஆசிரியன் ரொம்ப சந்தோஷமாப் பார்த்தான். தன்னுடைய சமகாலத்தைச் சேர்ந்த உயர்ந்த எழுத்தாளர் ஒருத்தருக்குச் சரியான இடத்தையும் கவுரவத்தையும் கொடுக்க முடிஞ்சுதே என்று சந்தோஷப்பட்டான். அவரவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சரியான மரியாதையையும் கவுரவத்தையும் கொடுக்க முடிஞ்சதுதான் அவன் வாழ்க்கையின் சந்தோஷம், மன நிறைவு!

**- நேர்காணல்: சமஸ்**





# உலகப் புகழ் தோட்டம்!

கனடாவில், மொன்ட்ரியல் தாவரவியல் தோட்டம், 160 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இங்கு, பல வகையான உருவங்களை, கண்ணை கவரும் வகையில், தாவரங்களை கொண்டு வடிவமைத்துள்ளனர். இந்தப் பூங்காவில், 20,000க்கும் மேற்பட்ட, செடி, கொடி மற்றும் மரங்கள் உள்ளன. உலகில் புகழ் பெற்ற பூங்காக்களில் இதுவும் ஒன்று என பெயர் பெற்றுள்ளது. 1931-ல் உருவாக்கப்பட்ட இந்த பூங்காவில், 31 வகையாக பிரிக்கப்பட்ட தோட்டங்கள் உள்ளன. விதவிதமாக மரங்கள் செடிகள் நாள் முழுவதும் பார்த்து ஆச்சரியப்படத்தக்க வகையில் அமைந்திருக்கின்றன!

பசிபிக் பெருங்கடலில் உள்ள தீவுக் கூட்டங்களால் ஆன நாடு, நியூசிலாந்து. இது, புவியியல் ரீதியாக, மற்ற நாடுகளில் இருந்து, மிகவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. நியூசிலாந்துக்கு அருகில் உள்ள நாடான அவுஸ்திரேலியாவுக்கு செல்ல வேண்டுமானால், 1,500 கி.மீ., பயணிக்க வேண்டும். பிஜி போன்ற தீவுகளுக்கு செல்ல வேண்டுமானால், 1,000 கி.மீ., பயணிக்க வேண்டும்.

மனிதன், கடைசியாக குடியேறிய பூமிப் பிரதேசம் இது தான். இதனால் தானோ என்னவோ, நியூசிலாந்தில் இன்னும் ஏராளமான இயற்கை வளங்கள், மனிதர்களால் அபகரிக்கப்படாமல் மிச்சம் உள்ளன.

இங்குள்ள வனகா என்ற சுற்றுலா தலம், சர்வதேச அளவில் பிரபலமானது. வனகா ஏரி, கலுதாஸ் ஆறு ஆகியவற்றின் மையப் பகுதியில், மலைச் சிகரங்களுக்கு இடையில் உள்ளது வனகா. சுற்றுலா பயணிகளின் உள்ளத்தை கொள்ளை கொண்ட இடமாக விளங்குகிறது. இந்த மலைச் சிகரங்கள் ஒவ்வொன்றும், 3,000 மீற்றர் உயரமுடையவை. இவற்றின் உச்சியிலிருந்து கீழே பார்த்தால், சொர்க்கத்தையே நேரில் பார்த்தது போன்ற பிரமை ஏற்படும்.

இந்த மலைச் சிகரங்களின் உச்சியிலிருந்து, இயற்கையை பார்த்து ரசித்தவர்கள், தம் வாழ்நாளில் மறக்க முடியாத நினைவாக, இதையே குறிப்பிடுவர். மலை உச்சியில் நின்றபடி, கீழே கரை புரண்டோடும் ஆற்று நீரையும், இயற்கை அழகையும், வர்ணிப்பதற்கு வார்த்தைகளே இல்லை. இதற்கு, என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம்... என்கிறார்கள்.

# அழகுக்கு இதுதான் தாய்நாடா!






# விந்தன் கூறிய குட்டிக்கதை



ஒருநாள் நாயிடம் "உன்னைக் கண்டால் எனக்கு மட்டுமல்ல... மனிதர்களுக்குக்கூடப் பொறாமை யாய் இருக்கிறது" என்றது பூனை.

"ஏனாம்..?" என்று கேட்டது நாய்.

"வாலை ஆட்டி ஆட்டிக் காட் டியே நீ பிழைத்துக் கொள்கிறாய் அல்லவா, அதனால்தான்!" என்றது பூனை சிரித்துக்கொண்டே.

நாய் அதைத் திருப்பிக் கேட் டது...

"மனிதர்களில் சிலர் தலையை ஆட்டி ஆட்டிக் காட்டியே பிழைத்துக் கொள்கிறார்களே, அதற்கென்ன சொல்கிறாய், நீ"

பூனை வாயைத் திறக்கவில்லை.

## விடுகதைகள்

1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?
2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?
3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?
4. ஆயிரம் பேர் அணி வகுத் தாலும் ஆரவாரம் இராது- அவர்கள் யார்?
5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்- நான் யார்?


**விடைகள்:**

1. சைக்கிள், 2. பட்டாசு, 3. தராசு, 4. எறும்புக் கூட்டம், 5. அஞ்சல் பெட்டி.



ஒட்டகசிவிங்கியின் நாக்கு கரு நீல நிறத்தில் இருக்கும். புலிகளின் ரோமங்களில் இருக்கும் கோடுகள் போல அதன் தோலிலும் கோடுகள் இருக்கும். ஒரு புலிமீது இருக்கும் கோடுகள் போல வேறு எந்த புலிக்கும் இருக்காது. ஒவ்வொரு புலிக்கும் வெவ்வேறு அமைப்பில் தான் கோடுகள் இருக்கும்.

யானைகளால் 3 மைல்கள் தொலைவில் இருக்கும் தண்ணீரை முகர முடியும். ஆமைகளின் பாலினத்தை அது எழுப்பும் ஒலியை வைத்து வித்தியாசப்படுத்தலாம்.




மனிதனுக்கு இணையான அறிவாற்றல் டொல்பினுக்கு உண்டு.

ஆந்தையால் ஒரேநேரத்தில் இரு கண்களாலும் இரு வேறு காட்சிகளைக் காண முடியும்.

பெண் சிலந்திப் பூச்சிகள், ஆண் சிலந்திகளுடனான உறவுக்குப் பின் அவற்றைக் கொன்று விடுகின்றன.

பூனைகள் ஒரு நாளைக்கு 16 மணி நேரம் தூங்குகின்றன.

## பதில் சொல்லுங்கள்



1. வானவில்லில் இடம்பெறாத நிறம் எது?
   சிவப்பு / மஞ்சள் / வைலட் / பிங்க்
2. பூமி எதனைச் சுற்றி வருகிறது
   நிலா / செவ்வாய் / வீனஸ் / சூரியன்
3. ஆரஞ்சு பழத்தில் நிறைந்திருக்கும் விட்டமின்
   விட்டமின் ஏ / விட்டமின் டி / விட்டமின் சி / விட்டமின் கே
4. உடலின் எந்த உறுப்பு இரத்தத்தை சுத்திகரிக்கிறது?
   மூளை / குடல் / மூக்கு / சிறுநீரகம்
5. 1 அடி =
   12 இன்ச்சஸ் / 11.5 இன்ச்சஸ் / 14 இன்ச்சஸ் / 15 இன்ச்சஸ்
6. டி.வி.டி என்றால் என்ன?
   டிஜிட்டலி வொலட்டைல் டிஸ்க் / டிமேன்ட் விடியோ டிஸ்க் / டிஜிட்டலி வியபல் டிஸ்க் / டிஜிட்டல் வெர்சடைல் டிஸ்க்
7. இந்திய தேசியக் கொடியில் உள்ள காவி நிறம் எதனைக் குறிக்கிறது?
   தியாகம் / வளம் / எதிர்மறை / அமைதி
8. எஸ்.எம்.எஸ். இன் விரிவாக்கம் என்ன?
   ஷார்ட் மெசேஜ் சர்விஸ் / ஷார்ட் மெசேஜ் ஸ்டோரி / ஸ்மால் மெசேஜ் சென்டிங் / ஷார்ட் மெசேஜ் சின்டிகேன்
9. சூரியன் எந்த திசையில் உதயமாகிறது?
   மேற்கு / வடக்கு / கிழக்கு / தெற்கு
10. 100 என்ற தொலைபேசி எண் யாரை அழைக்க பயன்படுகிறது?
    அம்புலன்ஸ் / காவல்துறை / மருத்துவர் / ராணுவம்



# அழகை, ஆத்மாவை வெளிப்படுத்தும் உன்னத கலைவடிவமே பரதக்கலை

## - யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் தெரிவிப்பு -

வாழ்வின் முழுமை கலைகளினால் ஏற்படுகிறது. இந்த வகையில் எங்கள் பண்பாட்டின் அழகை ஆத்மாவை வெளிப்படுத்தும் உன்னத கலைவடிவமாக பரதக்கலை வாய்த்துள்ளது. மனவெழுச்சி வெளிப்பாட்டுக்கும் அழகியல் மேம்பாட்டுக்கும் அரணாகும், பரதக்கலையைப் பெற்றோர் தமது பிள்ளைகள் பயில்வதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு கனடா சிதம்பர கலைமன்ற இயக்குநர் நாட்டிய பரத கலாவித்தகி கௌரிபாபுவின் மாணவியும் திருமதி.கிருபாகரன் சாந்தி தம்பதியரின் புதல்வியுமான செல்வி.பிருந்தா கிருபாகரனின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் குறிப்பிட்டார்.

ராஜாகிறிம்ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் சண்முகலிங்கன் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பல்வேறு துன்பங்களுக்கு பின்னர் யாழ்மக்களின் பண்பாடு மீண்டும் எழுச்சி பெற்று நிற்கிறது. புலம்பெயர் தேசத்து வாழ்வியலில் இருந்து கொண்டு, தாய்மண்ணுக்கு வந்து தாம் கற்ற பரதக்கலையை அரங்கேற்றிய நிகழ்வுகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன.

இந்த வரிசையில் கனடா ரொறண்டோ பல்கலைக்கழக மாணவி செல்வி.பிருந்தா கிருபாகரன் யாழ்.மண்ணில் தனது பரதக்கலையை அரங்கேற்றுவது பாராட்டுக்குரியது.

நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப பக்கவாத்தியங்களை கணனியில் பதிவு செய்து வந்து பரதக்கலையை மேடையில் தனி ஆளாக நின்று அரங்கேற்றம் செய்த பிருந்தாவின் முயற்சி எம்மைப் பிரமிக்க வைத்தது. 14 ஆண்டு கால பயிற்சி மூலம் பாவம், ராகம், தாளம் தப்பாது சிறப்பாக அவர் தனது நடன அளிக்கையைச் செய்துள்ளார் 'திரைகட லோடியும் திரவியம் தேடும்' நிலையில் தமிழர் பண்பாட்டுக் கலையினை வளர்க்கும் பிருந்தாவின் குடும்பத்தினர் இன்று ஊருக்கு வந்து கூடிக்குலாவி மகிழ்ந்திருக்க, பெற்றோரை, உற்றவரை, உறவினர்களை, நண்பர்களை மகிழ்விக்க இந்த அழகான நவீன அரங்கில் அருமையான பரதக் கலையை பிருந்தா அரங்கேற்றியுள்ளார்.

நீண்ட கலைப்பாரம்பரியத்தின் சொந்தக்காரர்கள் நாங்கள் என்பது இந்த நடன அரங்கேற்றத்தின் மூலம் நிரூபணமாகிறது. செல்வி.பிருந்தா 2000 ஆம் ஆண்டு கால தமிழர் பாரம்பரியத்தின் அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில் எதிர்காலத்திலும் சிறந்த நடன நிகழ்வுகளை நிகழ்த்த வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினர்களான யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி.சுகந்தினி சிறிமுரளிதரன் வைத்தியகலாநிதி சி.ஜமுனானந்தா ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

# சிரமதானப்பணிகள்



அச்சுவேலி வளலாய் மாதர் அபிவிருத்தி அமைப்பின் தலைவி திருமதி.கமலநாதன் சுகிர்தா தலைமையில் நேற்றுமுன்தினம் அச்சுவேலிப்பகுதியில் சிரமதானப்பணிகள் நடைபெற்றன.

இச்சிரமதானப்பணியில் வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன், வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அருளானந்தம் றஜீவன், கதிர்காமு சந்திரபோஸ், கிராம உத்தியோகத்தர் எஸ்.சாந்தரூபன், சமுர்த்தி உத்தியோகத்தர் எஸ்.மயூரன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு நிர்வாக உறுப்பினர் மாணிக்கம் சந்திரசேகரன் மற்றும் ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (08)

# ஆடிப்பூர உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவில் (பன்றிக் கோட்டுப்பிள்ளையார்) ஆடிப்பூர உற்சவம் நாளை முற்பகல் 10.00 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 7.00. மணி முதல் விநாயகப் பெருமானுக்கு விசேடபூசை அபிஷேகம் என்பன இடம்பெறும்.

மு.ப 10.00 மணி முதல் ஸ்ரீ மனோன்மணி அம்பிகைக்கு விசேட அபிஷேகமும், ருது சாந்தி வைபவமும் இடம்பெறும்.

11மணிக்கு நடைபெறும் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் திருவீதியுலா வரும் காட்சியும் தொடர்ந்து மகேஸ்வரபூசையும் இடம் பெறும்.

◆ ◆ ◆ ◆ ◆

காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த ஆடிப்பூரத்திருவிழா நாளை மு.ப 10.00 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8.00 மணி தொடக்கம் அம்பாளுக்கு விசேடபூசை அபிஷேகம் நடைபெற்று அடியார்களால் பொங்கல் குளிர்த்தி நீர்ச்சோறு படைத்தல் போன்ற நேர்த்திகள் நிறைவேற்றப்படும்.

அம்பாளுக்கு ருதுசாந்தி வைபவம் நடைபெற்று அம்பிகை வெளிவீதி உலாவரும் காட்சியும் இரவு இடம்பெறவுள்ளதாக ஆலய பிரதம சிவாசாரியார் கு.சரவணபவானந்த சர்மா தெரிவித்துள்ளார். (10)

# இரதோற்சவம்

(ஊரெழு)

ஊரெழு கிளானைப்பதி பர்வதவர்த்தனி மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

காலை 6.30மணிக்கு வசந்த மண்டபபூசையைத் தொடர்ந்து அம்பாள் தேரில் ஆரோகணம் செய்வார். தொடர்ந்து நாளை புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பூங்காவனமும் இடம்பெறவுள்ளன.

# கலாசாரவிழாவும் நூல்வெளியீடும்

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப்பேரவையால் வருடாந்தம் நடாத்தப்படும் கலாசாரவிழாவும் பூந்துணர் 4 நூல் வெளியீடும் அடுத்தமாதம் நடைபெறவுள்ளது.

பூந்துணர் 4 இற்கான ஆக்கங்களை பூநகரியைச் சேர்ந்த படைப்பாளிகளிடமிருந்து கலாசாரப்பேரவை கோரியுள்ளது. பூநகரி வளம் சார்ந்த கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என இலக்கியப்படைப்புக்களை அனுப்பி வைக்குமாறு பூநகரி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (112)

# பதிவிருக்கப் பெட்டகம்

கரகாட்டக்காரன் படத்தில் கவுண்டமணி செந்தில் வாழைப்பழ காமெடி நினைவிருக்கிறதில்லையா? அது வெறும் நகைச்சுவை காட்சி மட்டுமில்லை. ஒரு ரூபாய்க்கு இரண்டு வாழைப் பழம் விற்கப்பட்ட காலத்தை அது நினைவுபடுத்துகிறது. வாழைப் பழம் வாங்கவேண்டுமென்றால் பெட்டிக்கடைக்கு போகவேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறது. இதோடு அன்றாடம் வாழைப் பழம் சாப்பிடுகிற பழக்கம் உள்ளவர்களுக்கு பழம் சாப்பிடாவிட்டால் நிறைவுவராது. அதற்காக உணர்ச்சிவசப்பட்டு சண்டையிடுவார்கள் என்பதையும் அடையாளம் காட்டுகிறது.

– எஸ்.ராமகிருஷ்ணன்

பழைய திரைப்படங்களில் நாயகனின் சாகசத்தையும் பெருமையையும் நிலைநாட்டுவதற்கும் அடிவாங்குவதற்கும் இறுதியில் முழுமையாக வீழ்த்துவதற்கு அல்லது திருத்தப்படுவதற்கு வில்லன் எனப்படும் எதிர்நாயகத்தன்மை கொண்டதொரு பாத்திரம் தேவைப்படும். அவ்வளவுதான். அந்தப் பாத்திரத்திற்கான பிரத்தியேக பின்னணியோ பின்புலமோ குடும்ப விவரங்களோ தனித்தன்மைகளோ விளக்கப்பட மாட்டாது. ஆனால் இதெல்லாம் பழைய கால திரைப்படங்களில்தான். இப்போது பார்வையாளர்கள் முன்னேறியிருக்கிறார்கள். யதார்த்தத்திலிருந்து மிக விலகியோ அல்லது நம்பகத்தன மையற்றோ பாத்திரங்கள் உருவாக்கப்பட்டால் சிரித்து விட்டோ எரிச்சலடைந்தோ அதைப் புறக்கணித்து விடுகிறார்கள். காதலுக்கு எதிராக இயங்கும் நபரின் பழமைவாத மனதின் பின்னணி முதற்கொண்டு பிரதான பாத்திரங்கள் ஒவ்வொன்றின் தனித்தன மையையும் துல்லியமான காட்சிப் பின்னணிகளையும் அதன் நுண்விவரங்களையும் இன்று பதிவு செய்ய வேண்டியிருக்கிறது.

– சுரேஷ் கண்ணன்

கருணாநிதியின் வாரிசுகளில் அவரது நிஜமான கலை வாரிசு யாரென்று கேட்டால் சந்தேகமே இல்லாமல் அவரது மூத்தமகன் மு.க.முத்துதான். நடிப்பு, குரல்வளம் என்று எல்லா வகையிலும் திறமையானவர். எங்கேயோ போயிருக்க வேண்டியவர், தேவையற்ற அரசியல் சர்ச்சைகளாலும் தனிப்பட்ட பலகீனங்களாலும் என்ன ஆனார் என்றே தெரியாத அளவுக்கு ஆனார்.

கருணாநிதியின் முதல் துணைவியார் பத்மாவதி அம்மாளின மகன். பிரபல பாடகர் சி.எஸ்.ஜெயராமன் இவருக்கு தாய் மாமன். அவரது மகளைத்தான் முத்து மணந்தார்.

சிறுவயதிலேயே தாயை இழந்துவிட்டதால் குடும்பத்துக்கு ரொம்பவும் செல்லம். ரொம்பவும் சிக்கனமானவர் எனப்படும் கருணாநிதியே, இவருக்கு மட்டும் தாராளமாக 'பாக்கெட் மணி' கொடுப்பார் என்பார்கள். கருணாநிதியின் தாய் அஞ்சுகத்தம்மாள் முத்துவை கண்ணை இமைபோல பார்த்துப் பார்த்து வளர்த்தார். முரசொலி மாறனின் தாயாரும், கருணாநிதியின் அக்காவுமான சண்முகசுந்தரம் அம்மாளும் தன் மகனைவிட முத்துவுக்குதான் கூடுதல் பரிவு காட்டுவார் என்பார்கள். மூத்த தாரத்தின் மகன் என்பதால் ஊர் ஏதாவது பேசுமோ என்கிற அச்சத்திலேயே தயாளு அம்மாளும் முத்துவிடம் கொஞ்சமும் கண்டிப்பு காட்டமாட்டாராம். இவ்வாறாக அந்தப்புரத்தில் வளர்ந்த இளவரசன் மாதிரி கருணாநிதி குடும்பத்து பெண்களால் பொத்திப் பொத்தி வளர்க்கப்பட்டவர் இவர்.


அண்ணாவின் நாடகங்களால் ஈர்க்கப்பட்டு நடிகர் ஆனார் முத்து. எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர் என்பதால் தன்னுடைய மேனரிஸங்களையும், தோற்றத்தையும் அவரை மாதிரியே அமைத்துக் கொண்டார். இதுவே அவரது கலைவாழ்வு முடியவும் காரணம் ஆனது. எம்.ஜி.ஆர் திமுகவை விட்டு பிரியும்போது மு.க.முத்து ஒரு காரணமாக காட்டப்பட்டார். எம்.ஜி.ஆருக்கு திரையுலகில் போட்டியாகத்தான் அவரை களமிறக்கியதாக மேடைகளில் பேசப்பட்டார். எம்.ஜி.ஆர் பிரிவு பற்றி பொதுவாக எதையும் பேசாத கருணாநிதி [நெஞ்சுக்கு நீதியில் கூட மௌனம்தான் பதில்] இதற்கு மட்டும் மனம் கலங்கினார். "பாவம், அவன் ஒரு இளம் தளிர்" என்றுகூறி முத்துவை விமர்சிக்க வேண்டாமென்று கோரினார்.

முத்து ஒரு நல்ல காதலர். அவரது தோற்றப்பொலிவின் காரணமாக ஏராளமாக பெண்களை ஈர்த்தார். கூடுதலாக மதுவுக்கும் அடிமை ஆனார். வாழ்வுக்கான நிச்சயமான பாதை முன்பே விரிந்திருக்க, தடம் மாறி தப்பிப்போன ஆட்டுக்குட்டி முத்து. கருணாநிதிக்கு நிரந்தரமாக ஒரு வருத்தம் இருக்குமேயானால், அது முத்து குறித்ததாகதான் இருக்க முடியும்.

இதை எழுதிக் கொண்டிருக்கும்போதே 'நல்ல மனதில் குடியிருக்கும் நாகூர் ஆண்டவா' என்று முத்துவின் குரல் உச்சஸ்தாயியில் மனசுக்குள் ஒலிக்கிறது. தமிழனுக்கு கேட்கும் திறன் இருக்கும் வரை முத்துவின் குரலுக்கு மரணமில்லை!

– யுவகிருஷ்ணா

## சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காக சிகிரியா. சிங்கபாதத்தை பார்க்கத் தடை



(கொழும்பு)

சிகிரியாவின் சிங்க பாதத்தின் மேற் பகுதியை பார்வையிடுவதற்கு சுற்றுலா பயணிகளுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

காலை முதல் நண்பகல் 12 மணி வரை சிகிரிய சிங்க மலையின் மேற் பகுதியை பார்வையிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் அதிக காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக குளவிகள் கலைந்து, மனிதர்களை தாக்குவதற்கான சந்தர்ப்பம் உள்ளதன் காரணமாக தாம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக மத்திய கலாசார நிதியம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக குறித்த பிரதேசத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட பலர் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிகிரியா மலையில் 16 குளவிக் கூடுகள் காணப்படுவதாகவும் அவற்றில் இரண்டு கூடுகளில் உள்ள குளவிகள் அடிக்கடி கலைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிராமிய பொருளாதாரத்தை அரசு மேம்படுத்த வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)-

இலங்கையை முன்னேற்றகரமான நாடாக மாற்றுவதற்கு கிராமிய மட்டத்தில் பொருளாதாரத்தை அரசு மேம்படுத்த வேண்டும் என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை லக்கல பிரதேசத்தின் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

தற்போதைய அரசாங்கம் நாட்டில் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவில்லை என அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

விவசாயிகளை நெருக்கடிக்குள் தள்ளும் நடைமுறையையே அரசாங்கம் கொண்டுள்ளது.

கிராமிய பொருளாதாரம் அபிவிருத்தியடையுமாயின், வர்த்தகம் மற்றும் நாட்டின் பொருளாதாரம் மேன்மை அடையும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## போலி நாணயத்தாள்களுடன் குடும்பத்தினர் கைது



(கொழும்பு)

குருநாகல் கண்டி வீதி, முஸ்லிம் பள்ளிக்கு அருகில், சுமார் 70,000 ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் 26ஐ வைத்திருந்ததாக கூறப்படும் குடும்பமொன்றை குருநாகல் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வியாங்கொடை பகுதிக்கு விமானத்தில் பயணித்து கொண்டிருந்த பெண் (வயது 47), அவரது மகள் (வயது 18), மகன் (7) உட்பட மேற்படி பெண்ணின் மரு மகன் ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 2000 ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் 20உம், 5000 ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் ஆறும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்களிடம் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்தியாவிற்கு எதிராக இலங்கை சீனாவை பயன்படுத்த முடியாது

### கூறுகிறார் பேராசிரியர் ரொஹான்



இந்தியாவிற்கு எதிராக சீனாவைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது என பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான சர்வதேச நிபுணத்துவ பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடான உறவுகள் குறித்து இலங்கை கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

புதிதாக இந்தியாவில் ஆட்சி அமைத்துள்ள நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சி, சீனாவுடன் சுமுகமான உறவுகளைப் பேணவே விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகளும் சம அளவிலான இடைவெளியை பேணும் வகையில் வெளியுறவுக் கொள்கைகள் வகுக்கப்பட்டு வருவதாகவும் இவ்வாறான ஓர் பின்னணியில் இந்தியாவை ஆத்திரமடையச் செய்யும் வகையில் இலங்கை நடவடிக்கைகளை எடுக்கக் கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இநதியா எதிர்க்கும் போதெலலாம் சீனா உதவிக் கரம் நீட்டும் என்பது சாத்தியமாகாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெலே சுதாவை கைது செய்ய பாகிஸ்தானிடம் உதவி

(கொழும்பு)

நாட்டில் பாரியளவில் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய வெலே சுதாவை கைது செய்ய பாகிஸ்தானின் உதவி நாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெலே சுதா எனப்படும் ஜீசுந்த குமார என்பவர் போதைப பொருள் கடத்தல்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாக இலங்கை போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார், பாகிஸ்தான் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

எனவே வெலே சுதாவைக் கைது செய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கைப் பொலிஸார் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெலே சுதாவைக் கைது செய்யும் நோக்கில் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் சிகப்பு எச்சரிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

வெலே சுதா அதிக காலத்தை பாகிஸ்தானில் கழிப்பதாகவும், நாட்டுக்கு நாடு தாவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெலே சுதாவின் இலங்கை நண்பர் ஒருவரைக் கைது செய்யவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வருடத்தில் 3 ஆயிரம் தற்கொலைகள்

### பொலிஸ் ஊடகப் பிரிவு தகவல்

(கொழும்பு)


வருடமொன்றுக்கு சுமார் 3 ஆயிரம் தற்கொலைச் சம்பவங்கள் பதிவாவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோகன தெரிவித்துள் ளார்.

அவ்வாறான தற்கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் ஒன்று பதிவாகியுள்ளது.

மத்துகம ஸ்ரீ சுதர்ஷனாராம விகாரையில் அரச மரக்கிளையொன்றில் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலை செய்து கொண்டவரின் சடலம் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டதாகபொலிஸ் ஊடகப்பேச்சாளர் காரியாலயம் தகவல் வெளியிட்டுள்ளது.

வெலிபென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதான ஆணொருவரே இவ்வாறு தற்கொலை



செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மத்துகம ஸ்ரீ சுதர்ஷனாராம விகாரையில் தற்காலிகமாக தங்கியிருந்தவர் என பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

## மனித உரிமை பாதுகாப்பு குறித்து அரசின் திட்டத்தில் திருப்தியில்லை

### இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தகவல்

(கொழும்பு) .

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்கள் குறித்து திருப்திப்பட முடியாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் சில குறிப்பிடத்தக்க வகையில் இருப்பினும் அநாவசிய செயற்பாடுகளும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுவதாக அவ் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இச் செயற்பாடுகள் சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்படும் விசாரணைக்கு உதவுவதாக இலங்கை மனித




உரிமைகள் ஆணைக்குழுவின் நீதிச் செயலாளர் நிமல் ஜீ.புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

## ஞானசர்ரதேரர், சம்பிக்கவின் முகநூலை தடை செய்க

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர்! கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோரின் முகநூல் கணக்குகளைத் தடை செய்யுமாறு கோரி 24 மணித்தியாலங்களுக்குள் 12 இலட்சம் வேண்டுகோள்கள் அமெரிக்காவிலுள்ள முகநூல் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

பொதுபல சேனாவின் முகநூலினை தடைசெய்யுமாறு கோரி சுமார் 50 இலட்சம் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள கலகொட அத்தே ஞானசார தேரர், பங்களாதேஷ மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தோருடன் அடிப்படை வாதிகள் ஒன்றிணைந்தே இந்தக் காரியத்தைச் செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார்

## மாந்தையில் இரு கிராமங்களுக்கு மின்சாரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, மூன்றுமுறிப்பு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட இரு கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் நேற்று தெரிவித்தார்.

இவற்றுள் மூன்றுமுறிப்பு பகுதியில் 173 குடும்பங்களைச் சேர்ந்த 555 பேரும், சிறாட்டிக்குளம் பகுதியில் 56 குடும்பங்களைச் சேர்ந்த 187 பேரும் வசித்து வருகின்றனர்.

இம்மக்கள் தங்கள் கிராமங்களுக்கு மின்சார வசதிகள் இல்லாமையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பிரதேச செயலகத்தில் முறையிட்டிருந்தனர்.

இந்த முறைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்திய நிலையிலேயே, அக்கிராமங்களுக்கு மின் சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.



**வடக்கு கிழக்கு மாகாணங்களில் சந்தனமர நடுகையினை அறிமுகப்படுத்தும் வகையில் கிளிநொச்சி முருகானந்த கல்லூரியின் கட்டடத்திறப்பு விழாவில் கலந்துகொண்ட கல்வி அமைச்சர் பந்துல குணர்வத்தன கல்லூரி வளாகத்தில் சந்தனமரக் கன்றை நடுகை செய்யும் போது.... (70)**


ஒரு பாடசாலையில் 75m ஓட்டப்போட்டியில் பங்குபற்றிய 4 மாணவர்களைப் பற்றியதும், அவர்கள் அப்போட்டியை ஓடி முடித்த நேரம் பற்றியதுமான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

சுதன் 15.22 செக்கன் , மதன் 15 செக்கன் ,
கரன் 15.14 செக்கன் , குகன் 15.56 செக்கன்


20. இப்போட்டியில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெற்றவர்களுடைய பெயர்களை சரியான ஒழுங்கின்படி குறிப்பிடப்பட்டுள்ள விடையைத் தெரிக.

1. மதன், சுதன், குகன்
2. கரன், குகன், மதன்
3. மதன், கரன், சுதன்

21. இப்போட்டியில் மதனின் வேகம் செக்கனுக்கு எத்தனை மீற்றர்
1. 80m 2. 5m 3. 10m





22. முகங்களில் 1 – 6 வரை புள்ளிகள் இடப்பட்டுள்ளன. தாயக்கட்டைகள் அடுக்கப்பட்டுள்ள விதத்தை அருகேயுள்ள படமானது காண்பிக்கின்றது. இங்குள்ள இடைவெளிகள் A, B என்பன நிரப்பப்படாத வெற்றிடங்களாகும். அவற்றிகுப் பொருத்தமான உருக்கள் எதுவாகும்?



(A = …….. )

23. வெற்றிடம் B யிற்குப் பொருத்தமான உரு எது?



(B = ………. )

24. ஒரு அழிறப்பரின் விலை ரூ 5.00. ஒரு பேனாவின் விலை ரூ 17.00. பென்சிலின் விலை ரூ10.00 ஆகும். ரூ 57.00 ஐ வைத்திருக்கும் ஒருவர் அப்பணம் முழுவதையும் கொடுத்து வாங்கக்கூடிய பொருட்கள் எவை?
1. 2அழிறப்பர், 2பேனா, 1பென்சில்
2. 2அழிறப்பர், 1பேனா, 3பென்சில்
3. 1அழிறப்பர், 1பேனா, 5பென்சில்

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1 மணி 15 நிமி




# கல்வி முரசு

ஒவ்வொரு வினாவிற் குரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளிடையே தெரிந்தெடுத்து அதன் கீழக் கோடிடுக.

உருவிற்கு மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்க

1 
1. மண்வெட்டி, மனிதன், வீடு
2. வயல், மனிதன் , மண்வெட்டி
3. மண், மனிதன், மண்வெட்டி

2. 
1. மரம், வாள், வீடு
2. மனிதன், வாள், மரம்
3. வாள், மரம், மனிதர்கள்

3. 
1. மீன், மனிதன், தொப்பி
2. நீர், தூண்டில், மனிதன்
3. மனிதன், தூண்டில், மீன்


4. 
1. வைத்தியன், நோயாளி, சிகிச்சை
2. இருக்கை, வைத்தியர், நோயாளி
3. வைத்தியர், நோயாளி, பணம்

5. 
1. மீன், மீனவன், வள்ளம்
2. வள்ளம், மீனவன், மீன்
3. தூண்டில், மீன், மீனவன்.

6. சுனில் ரூபா 50.00 இற்கும் ரூபா 80.00 இற்கும் இடைப்பட்ட பணத்தொகையை வைத்திருந்தான். நளின் ரூபா 80.00 இற்கும் ரூபா 130.00 இற்கும் இடைப்பட்ட பணத்தொகையை வைத்திருந்தான். ரணில் ரூபா 180.00 இற்கும் ரூபா 130.00 இற்குமிடைப்பட்ட பணத்தொகையை வைத்திருந்தான் எனில் மிகக்குறைவான பணத்தொகை வைத்திருந்தவன்.
1. சுனில் 2. நளின் 3. ரணில்

7. மிகக்கூடுதலான பணத்தொகை இருக்கக்கூடியது
   1. சுனில்   2. அனில்   3. ரணில்

8. ஒரு பிள்ளை கீழே தரப்பட்ட உருவொன்றை முற்றத்தில் வரைந்து, கட்ட இலக்கம் 1 இல் ஆரம்பித்து இரண்டு கட்டங்கள் விட்டு முன்னால் உள்ள கட்டத்துக்குப் பாய்ந்து மீண்டும் பின்புறக்கட்டத்திற்குப் பாய்கின்றான். அவன் இவ்வாறு ஆரம்பத்தில் இருந்து ஒழுங்காக முன்னும் பின்னும் பாய்ந்த கட்டங்களின் இலக்கங்கள் சில முறையே 4, 3, 6, 5, 8, 7 ஆகும். அதற்கமைய அவன் 8 ஆவது தடவை முன்னால் பாயும் கட்டத்தின் இலக்கத்தை எழுதுங்கள்.




1. 8
2. 4
3. 6

9. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை கருத்துள்ள வகையில் ஒழுங்குபடுத்தும் விடையைத் தெரிவு செய்யுங்கள்.

1. எலி பயந்து நடுங்குவதைப் பார்த்துப் பூனை சிரித்தது.
2. பூனை பயத்தினால் தன்னை விடும்படி கெஞ்சியது.
3. பூனை ஒன்று எலியைப் பிடித்தது.
4. அவ்வேளை அப்பூனைமேல் ஒரு நாய் பாய்ந்தது.
5. எலி பயத்தினால் நடுங்கியது.


1). 3, 5, 1, 4, 2   2). 2, 1, 4, 3, 5   3). 1, 2, 4, 3, 5

10. பின்வருவனவற்றில் ஒன்று வித்தியாசமானது, அதன் கீழ் கோடிடுங்கள்.




A   B   C

11.



A   B   C


12.



A   B   C



நிறுவனம் ஒன்றிற்கு 4 வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட கார், பஸ்வண்டிகள் பற்றிய விபரம் கீழே உள்ள வரைபு காட்டுகிறது. அதற்கமைய கேட்கப்பட்ட வினாவிற்கான சரியான விடையைத் தெரிவுசெய்யுங்கள்.




13. 2005 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்படவிருக்கும் பஸ்வண்டிகளின் எண்ணிக்கை என்ன?
   1. 45   2. 40   3. 35


14 2005 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்படவிருக்கும் கார்களின் எண்ணிக்கை யாது?
   1. 40   2. 80   3. 10

15. 2000 ஆண்டு இறக்குமதி செய்யபபட் பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது?
   1. 10   2. 20   3. 30

16. வ்பஸ்றக்குமதி வருடாவருடம் எவ்வாறு காணப்படுகிறது?
   1. கூடிச்செல்கிறது   2. மாற்றமில்லை   3. சமீமாகவுள்ளது.


கீழ்வரும் ஒவ்வொரு வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள நான்கு உருக்களையும் அவதானித்து வேறுபட்ட உருவின் கீழ்க் கோடிடுக.

17.




01   02   03   04

18.



01   02   03   04

19.



01   02   03   04

# துர்நாற்றம் வீசும் கழிவுவாய்க்கால்

## டெங்கு பரவும் அபாயநிலை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மணிக்கூட்டு கோபுர வீதியில் காணப்படும் கழிவுநீர் வாய்க்கால் துர்நாற்றம் வீசுவதால் அவ்வீதியால் பயணிப்போர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பொலிஸ் நிலைய கழிவுகள் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை கழிவுநீர் இவ்வாய்க்காலினால் ஊடறத்து செல்வதினாலேயே துர்நாற்றம் வீசுகின்றது.

குறித்த வாய்க்கால் பல மாதங்களுக்கு மேலாக துப்பரவு பணியினை மேற்கொள்ளப்படாமையால் விலங்கு கழிவுகள் மற்றும் மீன் கழிவுகளினால் துர்நாற்றம் அதிகமாக வீசுகின்றது.

அருகில் பாடசாலைகள், வைத்தியசாலைகள், மற்றும் ஹோட்டல்கள் அமைந்துள்ளதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதுடன் தொற்றுநோய்கள் பரவுவதற்கான அறிகுறிகள் காணப்படுவதுடன் டெங்கு நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே, குறித்த வாய்க்காலின் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறு உரிய தரப்பினரிடம் பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(25)

# வரணி மத்திய கல்லூரியை

# தரமுயர்த்த பாடுபட்டவர் சந்திரகுமார்

## கல்லூரி அதிபர் மங்களேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் வரணி மத்திய கல்லூரி தரம் உயர்த்தப்பட்டு பெருமளவு வளங்களுடன் நிமிர்ந்து நிற்பதற்கு வழிவகுத்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் என வரணி மத்திய கல்லூரியின் அதிபர் மங்களேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வரணி மத்திய கல்லூரியில் 37 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய மூன்று மாடி வகுப்பறை கட்டடத்தொகுதியினை திறந்து வைத்து நிகழ்வுக்கு தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எமது பாடசாலையினை தரம் உயர்த்துதல், மற்றும் தேவை கள் தொடர்பில் நாம் முதலில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களை சந்தித்து கோரிக்கைகளை முன்வைத்த போது அவர் உடனடியாகவே தொலைபேசி மூலம் உரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு நடவடிக்கையினை எடுத்தார். அவ்வாறே ஏனைய தேவைகள் தொடர்பிலும் அவர் எங்கள் பாடசாலை மீது அக்கறை எடுத்து செயற்பட்டு கல்லூரியின் முன்னேற்றத்திற்கு வித்திட்டுள்ளார்.

மிக முக்கியமாக எங்கள் பாடசாலை மாணவர்கள் நாடாளுமன்றத்தையும், ஜனாதிபதி மாளிகையினையும் சென்று பார்வையிடுவதற்கும் அங்கு ஜனாதிபதி எங்கள் மாணவர்கள் சந்திப்பதற்கும் அனுமதி உள்ளிட்ட ஏற்பாடுகளை செய்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்.

எங்களுடைய மாணவர்கள் ஜனாதிபதியை சந்தித்த போது பாடசாலையின் தேவையினை அவரிடம் எடுத்து கூறியதன் பயனாகவே இன்று தென்மராட்சியில் நிறைவான வளங்களுடன் எங்கள் பாடசாலை நிமிர்ந்து நிற்கிறது எனக் குறிப்பிட்டார்.



இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், மத்திய கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் சித்திராநந்த, ஆயிரம் பாடசாலைகள் திட்டப் பணிப்பாளர் பியசேன, தென்மராட்சி வலய கல்விப்பணிப்பாளர் கிருஸ்ணகுமார் மற்றும் கோட்டக் கல்வி அதிகாரி ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(40)

# மதவழிபாட்டுத் தலங்களுக்குரிய விபரங்களை பதிவு செய்ய அறிவிப்பு

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 19 கிராம சேவகர் பிரிவிலுள்ள சகல மத வழிபாட்டுத்தலங்களுக்குரிய முழு விபரங்களை நாளை மறுதினம் வியாழக்கிழமை பதிவு செய்யுமாறு பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆலய நிர்வாகிகள் ஆலயத்தின் இன்றைய நிலைகள், தேவைகள் அற்புதங்கள், உற்சவங்கள், பற்றிய விபரங்களையும் பதிவு செய்து அனுப்புமாறும் மேலதிக விபரங்களை அறிய விரும்பின் 0775415453 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறியலாமெனவும் பூநகரி பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(112)

# கெரடமடு பிள்ளையார் ஆலயத்தில் ஆடி அமாவாசை விரதம் அனுஷ்டிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கெரடமடு பிள்ளையார் ஆலயத்தில் ஆடி அமாவாசை விரதம் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து சிவபெருமான் வீதி வழியாக கெரடமடு பிள்ளையார் ஆலயத்தைச் சென்றடைந்து தந்தையை இழந்த அனைவரும் யாகக்கிரிகையினை மேற்கொண்டு குருமார்களுக்கு தானம் வழங்கி இவ்விரதத்தை அனுஷ்டித்தமை குறிப்பிடத்தக்கது.

# அலங்கார உற்சவம்

(அச்சுவேலி)

வசாவிளான், கோணாவளையம்பதி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

ஆலய பிரதமகுரு ச.ஈஸ்வர சர்மா தலைமையில் நடைபெறும் இத்திருவிழாக்களில் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 9ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 10ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் 11ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

எனவே, திருவிழாக்காலங்களில் அடியார்கள் அபிஷேகத்திற்குரிய பால்,இளநீர்,பூ, பூமாலை முதலிய பொருட்களை வழங்கி அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் இறுதிநாள் நிகழ்வில் நடன, இசை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(85)




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# ஆரம்பப் பிரிவு மாணவருக்கான கணிதச் செய்கை முடிவுகள்

நேற்றையதொடர்ச்சி ....

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே 2 ஆம் தவணை ஆரம்பத்தில் நடாத்தப்பட்ட பொது அறிவு வினாடிவினா, சிங்கள வினாடிவிடை, துரிதகணிதச் செய்கை, சித்திரம் வரைதல் ஆகிய போட்டிகளுக்கான முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு

துரிதகணிதச்செய்கை

தரம்-02

ந.அருட்கதிர் (யா/மல்லர்கம் விசாலாட்சி வித்தியாலயம்), கி.அபிசாளினி (யாழ்ப்பாணக் கல்லூரி), கோ.ரதுசிகா (கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயம்)

தரம்-03

இ.லம்ஷனா (யா/மகாஜனக் கல்லூரி), சி.சிறிவைஷ்ணவி (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), பே.தக்ஷிகா (யா/மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம்)

தரம்-4

வ.டர்சிகன் (அராலி சரஸ்வதி வித்தியாலயம்), ச.குணாளன் ஏழாலை மேற்கு சைவ சன் மார்க்க வித்தியாலயம்) வ.அபினன் (மகாஜனக் கல்லூரி)

தரம்-5

வி.துவின்ஷா (மகாஜனக் கல்லூரி), ம.கஜன் (ஸ்கந்த வரோதயக் கல்லூரி சி.கபிஷன் (மகாஜனாக் கல்லூரி)

(06)

# கரந்தன் ஊரெழு வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச நிர்வாகப் பகுதியிலுள்ள கரந்தன் ஊரெழு வீதி கடந்த பல வருடங்களாக திருத்தப்படாத நிலையில் உள்ளதால் இவ்வீதியால் பிரயாணம் செய்வோர் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாத சேதமடைந்து காணப்படும் இவ்வீதியால் மழைகாலங்களில் இவ்வீதியூடாக போக்குவரத்தை மேற்கொள்வது என்பது சவாலாக இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி மேடுபள்ளமாக காணப்படுவதுடன் விவசாயிகள் கூடுதலாக தமது விளைபொருடகளை சைக்கிள்கள், வாகனங்கள் மூலம் திருநெல்வேலி சுன்னாகம்; மருதனார்மடம் சந்தைகளுக்கு கொண்டு செல்கின்றார்கள்.

இதனால் பல விவசாயிகள் பல கஷ்டங்களை எதிர்நோக்குவதையும் காணமுடிகிறது இதேபோல இவ்வீதியால் பாடசாலை மாணவர்களும் சிரமத்தின் மத்தியில் செல் வதாகவும் தெரிவிக்கும் மக்கள் இவ்வீதியை உடன் திருத்த சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

(08)

# சரவணை சின்ன மடுமாதா வருடாந்த திருவிழா ஆரம்பம்

சரவணை சின்ன மடுமாதா யாத்திரை தல பெருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளதுடன் 4 ஆம் திகதி திங்கட்கிழமை நற்கருணை விழாவும் காலை திருவிழாத் திருப்பலியும் இடம்பெறவுள்ளது.

வருடாவருடம் இப்பகுதியிலே கடைகளை நிறுவுபவர்களும் மற்றும் இனிப்பு, கச்சான், ஐஸ்கிறீம் கடைகளை அமைப்பவர்களும் முன்கூட்டியே உங்கள் இடத்தை பதிவுசெய்து கொள்ளுமாறு ஆலய பரிபாலகர் கேட்டுள்ளார்.

மேலும் 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு கடைகள் கொடுக்கும் நிகழ்வு இடம்பெறும். எனவே வியாபாரிகள் நேரத்திற்கு சமூகம் அளித்து உங்கள் பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுமாறும் 4, 5 ஆம் திகதிகளில் அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

### ரஷ்ய புரட்சி படைகளின்

# ஏவுகணைகள் நிறுத்தும் இடங்களை காட்டிக்கொடுக்க அமெரிக்கா முடிவு



ரஷ்ய ஆதரவு புரட்சிப் படையினர் தரையிலிருந்து விண்ணில் உள்ள இலக்குகளைத் தாக்கும் பக் ஏவுகணைகளை வைத்துள்ள இடங்கள், ஏவுமிடங்கள் உள்ளிட்ட தகவல்களை உக்ரைனுக்குத் தர அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன் இந்தத் தகவல்களை அமெரிக்க உளவுத்துறையினரும், பென்டகனும் அமெரிக்க அரசிடம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், இது தொடர்பாக அமெரிக்க அதிபர் ஒபாமா இன்னமும் முடிவெடுக்கவில்லை எனவும் ஏற்கனவே உக்ரைன் விடயத்தில் அமெரிக்க உளவுத் துறையை அடக்கமாகவே இருக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இநத நிலையில் இவ்வாறான தொரு வேலையைச் செய்ய அவர் உத்தரவிடுவாரா என்பது தெரியவில்லை. ஒருவேளை புரட்சிப் படையினரின் முக்கிய தாக்குதல் கருவிகள், இடங்கள் உள்ளிட்டவை குறித்த துப்புக்களை அமெரிக்கா உக்ரைனுக்குக கொடுத்தால், மோதல் மேலும் தீவிரமடையும் என்றும் அதே சமயம் ரஷ்யாவும் நேரடியாக களத்தில் குதிக்கும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே ரஷ்ய ஆதரவு புரட்சிப் படையினரை சமாளிக்க முடியாமல் உக்ரைன் திணறி வருகிறது. ரஷ்யாவின் ஆதரவு அதிகமாக இருப்பதால் புரட்சிப் படையினரை ஒடுக்க உக்ரேனால் முடியவில்லை.

தற்போது புரட்சிப் படையினரின் அதி பயங்கர ஆயுதமாக ரஷ்யா வழங்கியுள்ள பக் ஏவுகணைகள்தான் உள்ளன. அதில் ஒன்றுதான் மலேசியன் ஏர்லைன்ஸின் எம்எச் 17 விமானம். உண்மையில் இந்த விமானத்தை புரட்சிப் படையினர் வீழ்த்திய பின்னர்தான் பக் ஏவுகணையின் அபாயம் குறித்து உலகத்தில் பலருக்கும் தெரிய வந்தது.

தற்போது ரஷ்யாவிலிருந்து புரட்சிப் படையினருக்கு அதிக அளவில் ஆயுதங்கள் போயுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

எனவே வரும் நாட்களில் உக்ரைன் இராணுவத்திற்கும், புரட்சிப் படையினருக்குமான மோதல் மேலும் உக்கிரமடையும் வாய்ப்புக்கள் உள்ளன. ஏற்கனவே புரட்சிப் படையினரின் நடமாட்டம் உள்ளிட்டவை குறித்த செயற்கைக் கோள் படங்களை அமெரிக்கா, உக்ரைனுக்கு வழங்கி வருகிறது. ஆனால் பக் ஏவுகணைகள் குறித்த தகவலை அது வழங்காமல் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மனிதர்களை கடத்துவதில் இந்தியாவுக்கே முதலிடம்



மனிதர்களைக் கடத்துவதில் தெற்காசியா அளவிலான பட்டியலில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தெற்காசியாவுக்கான குற்ற அலுவலக ஐ.நா.பிரதிநிதி கிறிஸ்டினா அல்பர்டின் இது குறித்து தெரிவிக்கையில் இந்தியா மனித கடத்தல் தளமாக இருப்பதுடன் நேபாளம், வங்க தேசம், வளைகுடா நாடுகளில் இருந்து பலரும் ஏமாற்றப்பட்டு அழைத்து வரப்படுகின்றனர்.

இவ்வாறு எத்தனை பேர் என்பது துல்லியமாக சொல்ல இன்னும் சில ஆய்வுகள் நடாத்தப்பட வேண்டியுள்ளன. கடத்தப்படுபவர்கள் பல வழிகளில் பாதிக்கப்பட்டு தாய்நாடு செல்ல முடியாமல் இந்தியாவிலேயே தங்கி விடுகின்றனர்.

வங்கமொழி பேசும் வங்க தேச பெண்கள் 100 இற்கும் மேற்பட்டோர் இவ்வாறு பாதிப்புக்குள்ளாகின்றனர். ஒவ்வொரு ஆண்டும், தெற்காசிய அளவில் சர்வதேச எல்லை பகுதியில் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் இவ்வாறு கடத்தப்படுகின்றனர் என்றார்.

# மும்பை மாற்றுத்திறனாளிக்கு ஒபாமா விருந்தளிக்கவுள்ளார்

உலகளவில் மனநலம் பாதிக்கப்பட்டும், மாற்றுத்திறனாளிகளான சாதனை புரிந்த 12 பேருக்கு அமெரிக்க அதிபர் ஒபாமா விருந்தளித்து கௌரவிக்கவுள்ளார்.

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் அலுவலகம் உலகளவில் அனைத்து விடயங்களையும் கவனித்து வருகிறது. இதன்படி மனிதநேய எண்ணத்துடன் பல்வேறு செயற்பாடுகள், நிதி வழங்குதலை வழக்கமாக ஒரு பணியாக கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் மாற்றுத்திறனாளி குழந்தைகளில் சாதனை புரிந்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி நாளை மறுதினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மும்பை புறநகர் மாவட்ட பகுதியான கோர்கான் பகுதியைச் சேர்ந்த 23 வயது பெண்ணும் அழைக்கப்பட்டுள்ளார்.

கோவாவை பூர்வீகமாக கொண்ட பிரகாஷ் நாயக், ஆகாஷ் தம்பதியினரின் ஒரே மகளான நேகா தற்போது மும்பையில் வசித்து வருகிறார். தடகள வீராங்கனையான இவர் சிறப்பு ஒலிம்பிக் சர்வதச தூதராகவும், 100 மீற்றர், ஷாட்புட்டில் நிகழ்ச்சியிலும் பங்கேற்றுள்ளார்.

# இஸ்ரேல் இராணுவ தாக்குதல் ஆரம்பம்



இஸ்ரேல் இராணுவம் தமது வான், தரை மற்றும் கடல்வழி தாக்குதல் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதாக அறிவித்துளளது.

பலஸ்தீனிய போராளிகள் குழுவினால் மனிதாபிமான போர்நிறுத்த உடன்படிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் மீண்டும் தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் 24 மணித்தியால போர் நிறுத்த கோரிக்கையை இஸ்ரேல் ஏற்றுக் கொண்ட நிலையில், ஹமாஸ் போராளிகளினால் போர்நிறுத்தம் மீறப்பட்டால் மீளவும் தாக்குதல் முன்னெடுக்கப்படும் என்று எச்சரித்திருந்தது.

இஸ்ரேல் படையினர் காஸாவிலிருந்து வெளியேறாத நிலையிலும், இடம்பெயர்ந்த மக்கள் மீள அவர்களின் சொந்த இடங்களுக்கு திரும்பாத பட்சத்திலும் போர்நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது என ஹமாஸ் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

# பாக்.குழந்தைகளை போலியோவிலிருந்து பாதுகாக்க அமிர்தாப்பச்சன் தீவிர முயற்சி

போலியோ நோயை எதிரத்து போராடி, அந்நோய்க்கு எதிரான பிரசாரங்களின் வாயிலாகவும், சொட்டு மருந்து போன்ற தடுப்பு முறைகளின் மூலமாகவும் போலியோவை வெற்றி கொண்டு இந்நோயை முற்றிலுமாக ஒழித்த நாடாக இந்தியாவை கடந்த மார்ச் மாதம் உலக சுகாதார கழகம் அறிவித்தது.

இதனையடுத்து, “போலியோ ஒழிந்த நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டுள்ளது பெருமைக்குரிய செய்தியறிந்து நான் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகிறேன்” என இந்தியாவின் “சூப்பர் ஸ்டார்“ நடிகரும், போலியோவை ஒழிக்கும் முயற்சியில் கடந்த 10 அண்டுகளுக்கும் மேலாக சர்வதேச சிறுவர் நிதியமான “யூனிசெவ்” நிறுவனத்தின் நல்லெண்ணத் தூதராகவும் இருந்துவரும் அமிதாப் பச்சன் தெரிவித்துள்ளார்.



இந்நிலையில், டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அமிதாப் பச்சனிடம் அண்டை நாடான பாகிஸ்தானில் இன்னமும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் போலியோவிலிருந்து விடுபட முடியாமல் இருக்கின்றனர் என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்த அவர், “நமது நாடு போலியோவில் இருந்து முற்றிலுமாக விடுபட்டு விட்டது.

இந்த முயற்சியை நாம் பாகிஸ்தான் போன்ற மற்றைய அண்டை நாடுகளுக்கும் முன்னெடுத்து செல்ல வேண்டும். நல்ல காரியத்துக்கு தன்னார்வலராக பணியாற்ற நான் எப்போதும் தயாராகவே இருக்கிறேன் என்றார்.

# இந்திய வரைபடம் குறித்த விபரங்களுக்கு சி.பி.ஐ. கண்காணிப்பில் கூகுள் நிறுவனம்




மத்திய அரசின் அனுமதியின்றி, கூகுள் நிறுவனம், இந்திய வரைபடங்கள் குறித்த விபரங்களை வெளியிட்டதாக புகார் எழுந்துள்ளதை அடுத்து, சி.பி.ஐ. அந்த நிறுவனத்துக்கு எதிராக முதல் கட்ட விசாரணையை ஆரம்பித்துள்ளது.

அமெரிக்காவை தலைமையிடமாக வைத்து செயற்படும், இணைய சேவை மற்றும் அது தொடர்பான தொழில்நுட்பங்களை வழங்கும் கூகுள் நிறுவனம், 2013 இல், ஒரு வரைபடப் போட்டியை ஏற்பாடு செய்தது. இந்தப் போட்டியில் பங்கேற்பவர்கள், தாங்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகில் உள்ள மருத்துவமனைகள், ஹோட்டல்கள் குறித்த வரைபடங்களை வெளியிடலாம் என அந்த நிறுவனம் தெரிவித்திருந்தது.

ஆனால், இதற்கான முறையான அனுமதியை நாட்டின் வரைபடம் தொடர்பான விவகாரங்களை கையாளும், “சர்வே ஆப் இந்தியாவிடம் பெறவில்லை என்றும் வரைபடங்களில் தவறான தகவல்கள் இடம் பெற்றுள்ளதாகவும் புகார் எழுந்தது.

குறிப்பாக, நாட்டின் முக்கியமான சில பகுதிகள் இந்திய வரைபடத்தில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து இதுகுறித்து சி.பி.ஐ. விசாரணையை ஆரம்பித்துள்ளதுடன் கூகுள் வரைபடம் தொடர்பான விவகாரங்களைக் கண்காணிக்கவும் சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளது.

# இந்திய எல்லைக்குள் சீன இராணுவம் ஊடுருவல்




ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில், இந்திய எல்லைக்குள் சீன இராணுவம் ஊடுருவி, முகாம்களை அமைத்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய - சீனா எல்லைப் பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது. குறிப்பாக ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் லடாக் பகுதிக்குள்ளும், அருணாச்சல பிரதேச மாநிலத்துக்குள்ளும், சீன இராணுவத்தினர் அடிக்கடி ஊடுருவுவது வழக்கமாகவுள்ளது.

இந்நிலையில், லடாக் பகுதியில், டெம்காக் என்ற இடத்துக்குள் சீன இராணுவத்தினர் சிலர் சமீபத்தில் ஊடுருவியதாகவும் அங்கு முகாம்களை அமைத்ததாகவும் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து இந்திய இராணுவ வீரர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் சீன இராணுவத்தின் உயர் அதிகாரிகளும் அங்கு வந்ததைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதையடுத்து சீன இராணுவத்தினர், அங்கிருந்து வெளியேற சம்மதித்தனர்.

# கிராமப்புற மாணவர்களின் கல்வித்தரம் மேலும் வளர்த்து எடுக்கப்பட வேண்டும்





(கிளிநொச்சி)

கடந்த காலங்களில் நிலவிய கல்விசார் புறக்கணிப்புக்கள் அனைத்தையும் கடந்து கிராமங்களின் கல்வித்தரமும் நகர்ப்புறங்களின் கல்வித்தரத்திற்கு இணையாக வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் நாம் பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம் அதன் வெளிப்பாடாகவே இன்று உருவாக்கம் பெற்றுள்ள பாடசாலைகளின் கட்டடங்கள் மற்றும் தொழிநுட்ப வளங்களின் உருவாக்கம் அமைந்துள்ளது என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கோணாவில் அ.த.க பாடசாலையில் 55 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பெற்ற மாபெரும் வகுப்பறைக் கட்டடத் தொகுதி திறப்புவிழாவில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கோணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை கடந்த நான்கு வருடங்களுக்கு முன் காணப்பட்ட தோற்றப்பாட்டோடு ஒப்பிடுகையில் இன்று ஏற்பட்டிருக்கின்ற மிகப் பிரமாண்டமான மாற்றங்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

அன்று ஒரு சில ஓலைக்குடிசைகள் மட்டுமே இங்கு காணப்பட்டன. அதுவும் ஒருபகுதி இடிபாடுகளுக்குள்ளான நிலையில் காணப்பட்டது. அந்த குடிசைக்குள்ளும் மாணவர்கள் வகுப்புக்களை அமைத்துக் கற்ற வரலாற்றைக் கொண்டது. இப்பாடசாலையின் கடந்த கால வரலாறு என்பதை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. ஆனால் இன்று மிகப் பிரமாண்டமான வகுப்பறைக் கட்டடங்களை உள்ளடக்கியதாக அனைத்து வசதிகளுடனும் மாணவர்கள் கற்கக்கூடிய நிலை உருவாக்கம் பெற்றுள்ளது.

இது கிராமப்புற மாணவர்களின் கல்வியில் நாம் கையாளுகின்ற பாரபட்சமற்ற கல்விக் கொள்கை முறையின் வெளிப்பாடாகவே அமைகின்றது.

கடந்த காலங்களில் நிலவிய பாரபட்சமான கல்விக் கொள்கையால் பாதிப்புக்களை எதிர்கொண்ட கிராமங்களின் கல்வித் தரத்தை நகர்ப்புறங்களின் கல்வித்தரத்திற்கு இணையாக வளர்த்தெடுக்கும் நோக்குடன் மீள்குடியேற்றத்தின் பின்னர் எம்மால் முன்னெடுக்கப்பட்ட பாரிய கல்விமேம்பாட்டு வேலைத் திட்டத்தின் பெறுபேறாகவே இவ்வாறான கட்டடவள உருவாக்கங்கள் அமைந்துள்ளன.

அது மட்டுமன்றி இன்று முன்னெடுக்கப்பட்டுவரும் அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளிலும் கிராமப்புறங்களுக்கே நாம் முன்னுரிமையளித்து வருகின்றோம். அதனடிப்படையில் கோணாவில் பாடசாலையின் மேலதிக தேவைகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும்.

மேலும் இப்பகுதி மாணவர்கள் மற்றும் மக்களின் போக்குவரத்திற்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் வீதியினையும் புதுமுறிப்பிலிருந்து ஸ்கந்தபுரம் வரை புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், ஆயிரம் பாடசாலை அபிவிருத்திட்ட பணிப்பாளர் பியசேன, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேல், கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## பொது...

கொண்டதாக கருதமுடியாது. அப்படி யாரும் கருதிவிடவும் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருமலை...

எதிர்ப்பு தெரிவித்து இந்த வகுப்பு பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தங்களது வளாக முதல்வருக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள மரணவர்கள் தெரிவித்தனர்.

## நல்லூர்...

பொருட்கள் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படும் எனவும் ஆலய சூழலில் ஆசாரசீலர்களாக வழிபாடாற்ற வேண்டும் எனவும் மின்சாரம், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதில் ஆலய நிர்வாகத்தினர், மின்சார சபையினர், போக்குவரத்துச் சபையினர், தனியார் சிற்றூர்தி சேவையாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (இ)

# நல்லூர் உற்சவகால நடைமுறைகள்

## யாழ். மாநகர சபை அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த வருட உற்சவத்திற்கான ஏற்பாட்டிலும் விட இம்முறை பல்வேறு மாற்றங்களுடன் நல்லைக்கந்தனின் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

நேற்று யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிற்றூர்தி சேவைக்கான வீதி ஒழுங்கில் சிறிய மாற்றமும் வீதியோரக் கடைகள் அமைப்பதில் இட ஒதுக்கீடுகளும் இட மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளதுடன், பிரதிஷ்டை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் மற்றும் நவீன அதிவலுக் கொண்ட மின் விளக்குகள் பொருத்தப்பட்டு மின்னொளி வழங்கப்படுகின்றது.

அதுமட்டுமல்லாமல் வீதித் தடைக்கான கண்டிப்பான உத்தரவுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் கலாசார உடையணிந்து பக்தர்கள் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதற்காக அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## வவுனியா...

கல்வி கற்ற மூன்று மாணவர்கள் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டதால் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாகாணசபைக்கு...

செயலாளர் தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அரசியல் சாசனத்தில் குறிப்பிட்ட உரிமைகளை பிரதம செயலாளர் அனுபவிக்கும் அதேவேளை, விடுமுறை தொடர்பில் முதலமைச்சருக்கு அறிவிக்க வேண்டியது அவசியமானது என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு பயணத்தை மேற்கொள்ளவோ அல்லது விடுமுறை எடுக்கவோ உத்தேசித்தால் பிரதம செயலாளர் அது குறித்து முன்கூட்டியே முதலமைச்சருக்கு அறிவிக்க வேண்டுமெனவும், அவ்வாறு அறிவிக்காவிட்டால் மாகாணசபையின் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் எனவும் விக்னேஸ்வரன் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளான சுமந்திரன் மற்றும் காங்கேசன்வரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர.

## வடக்கின்...

இங்கு மாணவர்கள் சீரான கல்வியை மேற்கொள்ள முடியாத அவலநிலை இருந்து வந்ததுடன், ஆசிரியர்களும் பல்வேறுபட்ட இடர்பாடுகளை சந்தித்திருந்தனர்.

இந்நிலையில் ஒருநாட்டில் யுத்தம் இடம்பெறுமானால் அது அழிவுக்குத்தான் வழிவகுக்குமே தவிர அபிவிருத்திக்கு ஒருபோதும் உதவப்போவதில்லை. என்பதுடன், கல்வித்துறையின் முன்னேற்றம் காண முடியாது.

அந்தவகையில் இந்நாட்டில் நிலவிய யுத்தம் முடிவுக்கு வந்த நிலையில் தற்போது இன, மத மொழி வேறுபாடின்றி எல்லோருக்கும் மனித வாழ்வு காத்திருக்கின்றது.

ஒவ்வொரு பிரதேசங்கள் தோறும் தலா மூன்று பாடசாலைகளை தொழில்நுட்ப பாடநெறிகளுடன் மேம்படுத்துமாறு ஜனாதிபதி எமக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொரிய நாட்டில் பல்வேறுபட்ட கல்விச்சாலைகள் தொழில்நுட்பப் பாடநெறிகளை கற்பித்து வரும் நிலையில் எமது நாட்டில் ஒரு சில கல்விச்சாலைகளே இப்பாடநெறிகளை முன்னெடுத்து வருகின்றன.

கொரிய நாட்டிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதியுதவியில் கிழக்கு மாகாணத்திற்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ள அதேவேளை வடக்கு மாகாணத்தில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கல்வித்துறை மேம்பாட்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அடுத்த வருடம் மூன்று மாடிகளைக் கொண்ட புதிய கட்டடமொன்றை அமைத்து அதனூடாக ஆங்கிலம் உள்ளிட்ட தொழிற்கல்வியையும் கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே 1AB சுப்பர் தர பாடசாலையாக தர்மபுரம் மத்திய கல்லூரி தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி, மத்திய கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் சித்ரானந்தா, வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன், ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன், கொய்க்கா நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உள்ளிட்ட கல்விப்புலம் சார்ந்தோர் உடனிருந்தனர்.

# மாந்தை கிழக்கில் மின்விநியோக விஸ்தரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு, மூன்றுமுறிப்பு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட இரு கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இந்தக் கிராம அலுவலர் பிரிவில் மூன்றுமுறிப்பு மற்றும் சிறாட்டிக்குளம் ஆகிய இரண்டு கிராமங்கள் உள்ளடங்குகின்றன.

இதில் மூன்றுமுறிப்பு பகுதியில் 173 குடும்பங்களைச் சேர்ந்த 555 பேரும், சிறாட்டிக்குளம் பகுதியில் 56 குடும்பங்களைச் சேர்ந்த 187 பேரும் வசித்து வருகின்றனர்.

இம்மக்கள் தங்கள் கிராமங்களுக்கு மின்சார வசதிகள் இல்லாமையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பிரதேச செயலகத்திடம் முறையிட்டிருந்தனர்.

இந்த முறைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்திய நிலையிலேயே அக்கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

## உட்கட்சி...

கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதெனின் அதனை தீர்த்து வைக்க முயற்சிக்க வேண்டுமே தவிர அரசாங்கத்தை குற்றம் சுமத்துவது அர்த்தமற்ற ஒன்றாகும்.

அதேபோல் ஊடகங்களின் கருத்துக்கள் தனித்துவமானவை. அதனை அரசாங்கத்துடன் ஒப்பிட்டு பேசவும் முடியாது.

மேலும் இன்று சர்வதேச அமைப்புகளின் மூலம் அவர்களின் அழுத்தங்களை பயன்படுத்தி இந்த நாட்டை பிளவுபடுத்த நினைப்பது அரசாங்கமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே.

இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியில் செயற்படுவதும் பொய்யான சாட்சிகளை தயாரித்துக் கொடுப்பதும் அரசாங்கமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே.

இந்த நாட்டின் பிரஜைகளாக இருந்து கொண்டு தாய் நாட்டிற்கு எதிராக துரோகச் செயல்களில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்க விடயமே.

எனினும் அவர்களுக்கும் இலங்கையில் அரசியல் செயல்களில் ஈடுபட உரிமை உண்டு. அதனை நாம் ஏற்றுக் கொண்டுள்ளதன் காரணத்தினாலேயே இடமளித்துள்ளோம்.

எனினும் இன்று சர்வதேசத்துடன் கைகோர்த்து தாய் நாட்டிற்கு புதிதாக இந்த நாட்டை பிளவுப்படுத்த முயற்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சர்வதேசத்தின் சூழ்ச்சிகளினாலேயே அழிவை எதிர்நோக்குவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# நல்லூர் ஆலயச் சூழலில் வீதி விளக்குகள்; ஒளிரவிட்டார் அமைச்சர் டக்ளஸ்



யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் பொருத்தப்பட்ட மின்விளக்குகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக ஒளிரச் செய்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் மேற்படி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வீதி அபிவிருத்தி சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீதிப்புனரமைப்புப் பணிகளின் ஒரு கட்டமாக மின் விளக்குகளைப் பொருத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன்பிரகாரம் ஏற்கனவே முதலாம் கட்டமாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து வீரசிங்கம் மண்டபத்தின் ஊடாக சத்திரச்சந்தி வரை இவ் வீதிவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக பருத்தித்துறை வீதியில் முத்திரைச் சந்தியிலிருந்து நல்லூர் கோயிலைச் சூழவும் மற்றும் ஆனைப்பந்தி, ஆரியகுளம், வைத்திய சாலைச் சந்தி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஊடாக பிரதான வீதியைச் சென்றடையவுள்ளது.

இவ் மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தில் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள நிலையில் எதிர்காலங்களில் பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி உள்ளிட்ட ஏனைய பிரதான வீதிகளிலும் இம் மின்விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

பருத்தித்துறை வீதிக்கான 160 மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் அவை ஒளிரவிடப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனைக்கு அமைவாக பொருத்தப்படும் வீதி விளக்குகளால் இரவு நேரங்களில் ஏற்படக்கூடிய வீதி விபத்துக்களை தவிர்க்க முடியும் என்பதுடன் சமூக விரோத செயல்களையும் கட்டுப்படுத்த முடியுமென சமூக நலன்விரும்பிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனிடையே நல்லூர் கோயிலைச் சூழவுள்ள தனியார் காணிகளில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கட்டடங்கள் தொடர்பாகவும் அவற்றின் பாதிப்புக்கள் தொடர்பாகவும் அமைச்சர் கவனம் செலுத்தியிருந்தார்.

இதன்போது யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.மாவட்ட பிரதேச மின் பொறியியலாளர் ஞானகணேசன், யாழ்.நகரப் பகுதி மின்அத்தியட்சகர் அருள்நாதன் ஆகியோருடன் மாநகர சபை உறுப்பினர்களும் உடனிருந்தனர்.

# சிற்றூழியர் பற்றாக்குறை

யாழ்.போதனா வைத்திய சாலையில் சிற்றூழியர்கள் பற்றாக்குறை மீளவும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல்வேறு பிரிவுகளுக்கும் சேவையாற்ற சுமார் நூறு வரையான சிற்றூழியர்கள் வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வைத்தியசாலையின் நாளாந்தச் செயற்பாடுகள் பாதிக்கப்படும் நிலை ஏற்படுவதாகவும் தற்சமயம் நூறு வரையான தொண்டர் பணியாளர்களே கடமையாற்றி வருவதாகவும் இவர்களை விட மேலும் நூறு வரையான சிற்றூழியர்கள் நியமிக்கப்பட வேண்டியிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்சமயம் வைத்தியசாலையில் மொத்தம் 540 சிற்றூழியர்களே கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நேற்று முன்தினம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த மின்தடை இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை அமுல்படுத்தப்படும் என மின்சாரசபை அறிவித்துள்ளது.

தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, கந்தர்மடம், இலுப்பையடி, ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதியின் ஒரு பகுதி, பருத்தித்துறை வீதியின் ஒரு பகுதி, விஞ்ஞானபீடப் பகுதி, பழம் வீதி, வைமன் வீதி, நாவலர் வீதியில் கைலாசபிள்ளையார் கோவிலிலிருந்து அம்பலவாணர் வீதி வரை, இராசாவின்தோட்டம், சுண்டுக்குளி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதியில் மாட்டின் வீதி சந்தியில் இருந்து ஏ-9 வீதி வரை மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கின் தொழில்நுட்பக் கல்விக்கு உதவி வழங்க கொரிய தயார்

## கொரியத் தூதுவர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வடக்கு, கிழக்கில் தொழில்நுட்ப ரீதியான கல்வித்துறை மேம்பாட்டுக்கு முழுமையான பங்களிப்பை தொடர்ந்தும் வழங்க தயாராகவிருப்பதாக இலங்கைக்கான கொரியத் தூதுவர் லூங் வூன் சம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கோணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கொரிய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய கற்றல் கூடங்கள் பாடசாலை சமூகத்திடம் உத்தி யோகபூர்வமாக கையளிக்கும் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரிய நாட்டினது கொய்க்கா நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட இக் கற்றல்கூடங்களை திறந்து வைப்பதில் நான் பெருமையடைகின்றேன்.

1950 ஆம் ஆண்டு கொரிய நாடானது கல்வியறிவற்ற மிகவும் ஏழ்மையான நாடாகவே இருந்து வந்த நிலையில் பல்வேறு நாடுகள் உதவியதன் பயனாகவே உலகில் தற்போது மூன்றாவது பொருளாதார நாடாக கொரியா விளங்கி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை இன்று கொரியாவின் உதவியை பெற்று முன்னேற்றம் அடைகின்ற நாடாகவுள்ளது. அந்தவகையில் இங்குள்ள பாடசாலைகளில் புதிய கட்டடங்களை கட்டுவதற்கும் அதனூடாக தொழில்நுட்ப கல்வியறிவை மேம்படுத்தும் வகையிலும் ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளோம் என்றார்.

# ஆடிப்பூரம்

(குருநகர்)

அளவெட்டி மேற்கு ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை அம்பாளின் ருது விழாவான ஆடிப்பூரம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது. காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்து அருள்பாலிப்பாள். மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை வழமை போல் நடைபெறும். (-68)

# வலுவடையும் உறவு



(கொழும்பு)

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை புதுப்பித்துக் கொள்ள இரண்டு நாடுகளும் இருதரப்பிலும் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் பொருளாதார அமைச்சர் கசுயாசி அகாபா நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்த போது இந்த கருத்தை வெளிப்படுத்தினார்.

இதன்போது இரண்டு நாடுகளின் தரப்பிலும் பொருளாதாரம் மற்றும் வர்த்தகத்துறைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

இந்தநிலையில் ஜப்பானின் புதிய முதலீடுகளை தாம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையின் ஒலிபரப்பு மற்றும் சுற்றுலாத்துறைக்கு உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஜப்பானிய அமைச்சர் உறுதியளித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# தேய்வடையும் வடக்கு பாடசாலைகள்

வடக்கில் 400 பாடசாலைகளில் 80 இற்கும் குறைந்த மாணவர்களே கல்வி கற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள 400 பாடசாலைகளில் இவ்வாறு 80 இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்று வருவதாக மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதில் 162 பாடசாலைகளில் 50 முதல் 80 வரையிலான மாணவ மாணவியரே கல்வி கற்று வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளது.

மேலும் 250 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் ஐம்பதை விடவும் குறைவான மாணவ மாணவியரே கல்வி கற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

யுத்தம் காரணமாக பல தடவைகள் இடம்பெயர்ந்தமையே இவ்வாறு மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சிக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. மாணவர்களின் எண்ணிக்கை குறைவினால் ஆசிரியர்கள் விகிதாசாரத்திலும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.சில பாடசாலைகளில் ஒரு மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

# கோல்டன் கீ வழக்கு; நீதியரசர் விலகல்

கோல்டன் கீ வழக்கை விசாரிக்கும் நீதியரசர்கள் குழுவிலிருந்து தான் விலகிக்கொண்டுள்ளதாக பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நேற்று அறிவித்தார்.

தன்னுடைய பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் பத்திரிகையொன்றில் கட்டுரையொன்று வெளியாகிருப்பதனால் தான் இந்த முடிவை எடுத்ததாக அவர் அறிவித்துள்ளார்.

# விசேட கலந்துரையாடல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைமைக் காரியாலயத்திலிருந்து வ்ரும் அதிகாரிகளுக்கும் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் யாழ். மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடல் நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது. அண்மையில் கம்பகாவில் யாழ்.மாவட்ட இளைஞர் கிறிக்கட் அணிக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட சம்பவத்திற்கெதிராக யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனமும் யாழ்.மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தனித்தனியாக கடிதங்களை அனுப்பி வைத்ததன் அடிப்படையிலும் யாழ்.மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்ற 9ஆவது இளைஞர் நாடாளுமன்ற அமர்வை புறக்கணித்ததன் அடிப்படையிலுமேயே இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (48)

# சிலை திறப்பு விழா

(அல்வாய்)

அல்வாய் ஸ்ரீ வித்தியாசாலையில் முன்னாள் ஆசிரியர் அமரர் செல்லையா கணேசன் சரஸ்வதி சிலை திறப்பு விழா நாளை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

பாடசாலை அதிபர் வி.இந்திரலிங்கம் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக வட மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ள உள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், வட மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், யாழ் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(90)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.